www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

மலர் 88 இதழ் 03 | 2025 ஏப்ரல் 20 - ஏப்ரல் 26 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15




## நாகையில் ஏப்ரல் 15, 16, 17ல் பேரெழுச்சியுடன் நடைபெற்ற

# அகில இந்திய விவசாயிகள் சங்க மாநாடு

## எண்திசைகளில் இருந்து திரண்ட உழவர்கள்

**அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 30வது தேசிய மாநாடு 2025 ஏப்ரல் 15 ஆம் நாளன்று நாகப்பட்டினத்தில் தொடங்கியது. எண்திசைகளில் இருந்து திரண்டு வந்த விவசாயிகளால் நாகை மாநாடு குட்டி இந்தியாவாக காட்சியளித்தது.**

காவிரிப் படுகைக்கே உரிய அற்புதமான நெட்டிப் பின்னலில், கோட்டைக் கோபுரம் போன்ற கலைப்படைப்பு, மாநாட்டு வாசலாக அமைந்திருந்தது.

டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் குழுவில் விவசாயிகள் பிரதிநிதியாக இடம்பெற்று, மிகுந்த திறனோடு செயல்பட்டு, விவசாயிகளின் குறைகளை தீர்ப்பதற்கான பல்வேறு பரிந்துரைகளை அந்த குழு தருவதற்கு முக்கிய காரணமாக இருந்த, ஆற்றல் மிக்க தலைவர் தோழர் அதுல் குமார் அஞ்சான் பெயர் மாநாட்டு அரங்குக்கு சூட்டப்பட்டிருந்தது.

செண்டை மேளம் முழங்க பிரதிநிதிகள் வரவேற்கப்பட்டனர்.

சென்ற 29 வது மாநாடு நடைபெற்ற ஹைதராபாத்தில் இருந்து, பஸிய பத்மா தலைமையிலான குழுவினரால், மாநாட்டு வாயிலில் ஏற்றுவதற்காகக் கொண்டுவரப்பட்ட கொடியை, மூத்த தலைவர் சத்யன் மொகேரி பெற்றுக் கொண்டார். கொடியை

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்



## மாநிலங்களின் உரிமைகள் தொடர்ந்து பறிப்பு

# மாநில சுயாட்சியை மீட்டெடுக்க நீதிபதி குரியன் ஜோசப் குழு

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



**மாநிலங்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கவும், ஒன்றிய மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்தவும் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் குழு அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.**

சட்டப்பேரவையில் விதி எண் 110ன் கீழ் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏப்ரல் 15 அன்று முக்கிய அறிவிப்பை வெளியிட்டார். அப்போது,

“நம் நாட்டு மக்களின் நலன்களைப் போற்றிப் பாதுகாக்கும் வகையில், அதற்கான அரசியல் அமைப்பையும், நிர்வாக அமைப்பையும் அண்ணல் அம்பேத்கர் தலைமையில் உருவாக்கியவர்கள், ஒற்றைத் தன்மை கொண்ட நாடாக இல்லாமல், கூட்டாட்சிக் கருத்தியலை, நெறிமுறைகளைக் கொண்ட மாநிலங்களின் ஒன்றியமாக நாட்டை உருவாக்கினார்கள். ஆனால், இன்றைய காலகட்டத்தில் மாநிலங்களின் உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு, மாநில மக்களின் அடிப்படை உரிமைகளையே ஒன்றிய அரசிடம் போராடிப் பெற வேண்டிய இக்கட்டான நிலையில் இருக்கிறோம் என்பதை வேதனையோடு இங்கே பதிவு செய்கிறேன்.

பரந்து விரிந்த இந்த இந்திய நாட்டை, மொழிவழி உரிமைகளின் அடிப்படையில் உருவான மாநிலங்கள் தான் ஒற்றுமையாகக் காத்து வருகின்றன. இப்படி அமைக்கப்பட்ட மாநிலங்கள் அனைத்து அதிகாரங்களையும் கொண்டவையாக விளங்கினால் தான் மாநிலங்கள் வளர்ச்சி அடையும்; இந்தியாவும் வலிமை பெறும். இதை உணர்ந்து, ‘மாநிலத்தில் சுயாட்சி, ஒன்றியத்தில் கூட்டாட்சி’ என்ற பரந்துபட்ட கொள்கை முழக்கத்தை தமிழ்நாடு தொடர்ந்து உரத்து முழங்கி வருகிறது.

சமூகநீதி, பொருளாதார ஏற்றத் தாழ்வின்மை, ஒடுக்கப்பட்டோருக்கான வாய்ப்பு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, மாநில அரசின் கல்விக் கொள்கையின் அடிப்படையில் மருத்துவக் கல்வியில் தமிழ்நாட்டு மாணவர்கள் பங்கேற்பதை உறுதி செய்யும் வண்ணம் இருந்து வந்த நமது கல்விக் கொள்கையினை நீர்த்துப்போகச் செய்து, முழுமையாக ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் ‘நீட்’ எனும் ஒற்றைத் தேர்வின் வாயிலாக மட்டுமே மருத்துவக் கல்வி இடங்களை நிரப்பும் முறைக்கு மாற்றப்பட்டு விட்டது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

கட்சிக் கடிதம்

# எட்டப்பராக மாறிய எடப்பாடியார்!



போர்க்குணமிக்க தோழர்களே!

**தமிழ்நாடு போர்க்களத்தில் நின்று கொண்டிருக்கின்றது. மூர்க்கத்தனமான மோடி அரசு தமிழ்நாட்டு மக்களோடு போர் தொடுத்துள்ளது.**

தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றே ஆகவேண்டும். மும்மொழிக் கொள்கையை ஏற்றே ஆகவேண்டும். மறுத்தால் உங்களுக்குக் கொடுக்க வேண்டிய ரூ.2512 கோடி ரூபாயைக் கொடுக்க முடியாது.

நிதி நிலை அறிக்கையில் ஆண்டுதோறும் தமிழகத்தைப் புறக்கணிப்போம், நிதி கொடுக்க முடியாது.

பேரிடர் நிதி கொடுக்க மாட்டோம்.

மகாத்மா காந்தி வேலை உறுதியளிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி, பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு ஊதியமாக வழங்க வேண்டிய ரூ.4,000 கோடியை வழங்க மாட்டோம்.

மக்கள் தொகை கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு, தொகுதி சீரமைப்பு என்கிற பெயரால் தற்போதுள்ள 39 தொகுதிகளை 31 ஆக குறைப்போம்.

ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கொண்டு பேரவையில் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க மாட்டோம்.

உச்சநீதிமன்றம் ஆளுநர் செயல்பாடு சட்டவிரோதமானது என்று தீர்ப்பளித்தாலும் அது குறித்து நாங்கள் கவலைப்பட மாட்டோம். ஆளுநரை நீக்கம் செய்ய மாட்டோம்.

மதச் சார்பின்மை கொள்கைக்குப் புறம்பாகச் செயல்படுவோம்.

இஸ்லாமியர்களுக்கு எதிரான சட்டம் நிறைவேற்றுவோம்.

அடுத்து கிறிஸ்தவர்களுக்குரிய சொத்துகளைக் கணக்கெடுத்து வருகின்றோம்.

மக்களை மத அடிப்படையில் பிளவுபடுத்தாமல் விடமாட்டோம்.

இவை எல்லாம் ஒன்றிய பா.ஜ.க வின் அத்துமீறிய ஜனநாயக விரோதச் செயல்பாடுகள் ஆகும் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே.

மோடி அரசின் மூர்க்கத்தனமான மக்கள் விரோத, ஜனநாயக விரோதச் செயல்பாடுகளுக்கு எதிராக தமிழ்நாட்டு மக்கள் ஒன்றுபட்டு போர் புரிந்து வருகின்றார்கள்.

இப்போர் என்பது மகாபாரதப் போர் போன்று நிலம் பிடிப்பதற்கான போர் அல்ல.

ராமாயணம் போன்று பெண்ணை மீட்பதற்கான போர் அல்ல.

மாறாக தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டுவதற்கான போர்.

தமிழ்நாட்டு மாணவர்களைக் காப்பதற்கான போர்.

நீட் நுழைவுத் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விதிவிலக்கு வேண்டுமெனக் கேட்டு நடக்கும் போர்.

அரியலூர் அனிதா முதல் 22க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளின் உயிர்த் தியாகத்தின் பெயரால் நடக்கும் போர்.

இத்தகைய போர் கட்டம் கட்டமாக நடந்து வருகின்றது.

ஒவ்வொரு கட்ட போரிலும் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளில், பாஜகவைத் தவிர மற்ற கட்சிகள் குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியான அ.இ.அ.தி.மு.க உட்பட அனைவரும் தோள் கொடுத்து வருகின்றனர்.

காரணமென்ன? இப்போர் இரு அரசுகளுக்கிடையே மட்டுமே நடந்து வருகின்ற போர் அல்ல.

மாறாக எட்டுக் கோடி தமிழ் மக்களின் எதிர்காலத்திற்குரிய போராகும்.


இத்தகைய மகத்தான போர் என்பது நாட்டிற்கே வழிகாட்டக் கூடிய போராகும்.

நாடு முழுவதும் உள்ள அனைத்து மாநில உரிமைகளும், நலன்களும் காக்கப்படுவதற்கான தர்மத்தை நோக்கிய உச்சப் போராகும்.

இத்தகைய போர் என்பது ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான போர் என்பதனை அக்கறை உள்ளோர் அனைவரும் அறியக் கூடும்.

ஜனநாயகத்தைச் சாகடித்து விட்டு, சாதிக்கப் போவது என்ன?

சுவர்இருந்தால்தானேசித்திரம் வரைய



முடியும் என்ற பழமொழியை அறியாத பாலகனும் உண்டோ?

ஆர்.எஸ்.எஸ் எனும் அமைப்பின் அரசியல் பிரிவாகச் செயல்படும் பா.ஜ.க தன்னை அரசியல் ரீதியாக எதிர்க்கும் அரசியல் கட்சிகளை, அரசியல் ரீதியாக எதிர்கொள்ள இயலாமல், தனக்குக் கிடைத்துள்ள அரசியல் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி மாற்றுக் கருத்துடைய அரசியல் கட்சிகளைப் பழி வாங்குவது, உடைப்பது என்ற அநாகரிகச் செயலைத் தானே பாஜக கூச்சநாச்சமின்றிப் பகிரங்கமாகச் செய்து வருகின்றது.

மகாராட்டிர மாநிலத்தில் இயங்கி வந்த, நாடறிந்த தலைவரான சரத் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் கட்சியின் நிலை என்ன ஆனது?

மகாராட்டிர மாநிலத்தையே தன் கைக்குள் வைத்திருந்த சிவசேனாவின் நிலை என்ன ஆனது?

இவற்றை எல்லாம் அறியா அரசியல் தலைவரா எடப்பாடி?

நீண்ட காலமாக அதிமுகவில் நல்ல தொண்டராக, சட்டமன்ற உறுப்பினராக, ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குரியவராக, அமைச்சராக, சசிகலாவின் ஆதரவைப் பெற்று முதலமைச்சராக நான்காண்டு காலம் பணியாற்றியவர். தற்போது பிரதான எதிர்க்கட்சித் தலைவராகச் செயல்பட்டு வருகின்ற எடப்பாடியார், பா.ஜ.கவின் நயவஞ்சக அரசியலை அறியாத சிறு பிள்ளையா?

முதலமைச்சராக இருந்த போது பா.ஜ.க ஒன்றிய அரசின் அனைத்து நிர்பந்தங்களுக்கும் அடிபணிந்த எடப்பாடியார், பின் ஏன் உறவைத் துண்டித்தார்?

பா.ஜ.கவுடன் ஏற்பட்ட அரசியல் உறவில் ஏற்பட்ட கசப்பான அனுபவம் தானே?

2023 செப்டம்பர் 25 ல் பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை. எந்தப் பிரச்சினை வந்தாலும் சந்திப்போம் என ஆவேசமாக முழங்கினார் எடப்பாடி.

2023 அக்டோபர் 4 ல் கூட்டணி முறிவு என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம் எனக் கம்பீரமாக உரைத்திட்ட எடப்பாடியார்.

2023 அக்டோபர் 6ல் எங்கள் நிலைப்பாட்டில் மாற்றம் கிடையாது என மார்தட்டிய எடப்பாடியார்.

2024 நவம்பர் 13 இல் இனிவரும் எந்தத் தேர்தலிலும் பா.ஜ.கவுடன் கூட்டணியில்லை எனச் சத்தியம் செய்த எடப்பாடியார்? அனைத்தையும் மறந்தது ஏன்?

நீங்கள் குலதெய்வமாகப் போற்றும், உங்களுக்கு வாழ்வளித்த உங்கள் அழகான முகத்தை ஊர் அறிய உலகறியச் செய்த இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா ஜெயலலிதாவைப் பார்த்து, ஊழல் ஆட்சி செய்தவர் என உங்களோடு இருந்து கொண்டே பேசினாரே பா.ஜ.கவின் முன்னாள் தலைவர், பழைய காக்கி அண்ணாமலை கூறியதை அவ்வளவு எளிதில் உங்களால் எப்படி மறக்க முடிந்தது?

ஜெயலலிதா என் மனைவிக்குச் சமம் என்று கூறினாரே அண்ணாமலை அதைக் கூடவா உங்களால் மறக்க முடிந்தது.

ஓர் வகுப்புவாதக் கட்சி மக்களை மதத்தின் பெயரால் பிளவுபடுத்துகிற கட்சி, சிறுபான்மை மக்களின் மீது இரக்கமற்ற முறையில் தாக்குதல் நடத்தும் நயவஞ்சகக் கட்சி, மதச்சார்பின்மை என்றால் அது எப்படி இருக்கும் எந்தக் கடையில் கிடைக்கும், கிலோ என்ன விலை என்று கேட்கக் கூடிய கட்சி என்பது எல்லாம் எடப்பாடியாருக்குத் தெரியாதா? புரியாதா?

உங்களை அச்சுறுத்துவது எது? கொடநாடு கொலை, கொள்ளை வழக்கா? அல்லது மகன் மீது உள்ள வழக்கா அல்லது உங்கள் சம்பந்தி மீது உள்ள வழக்கா? அல்லது உங்கள் மிக நெருங்கிய நண்பர் மீது உள்ள வழக்கா? அல்லது ஓபிஎஸ் உங்கள் மீது தொடுத்துள்ள வழக்கா? அல்லது உங்கள் கட்சி குறித்தும் தேர்தல் சின்னம் குறித்தும் நடைபெற்று வரும் வழக்கா?

எது உங்களை ஆட்டிப் படைக்கிறது?

எத்தகைய மிரட்டலுக்கு அஞ்சி நடுங்கி வாய் பேச முடியாத மௌன சாமியாராகி அமித்ஷா உதிர்த்த அமுதச் சொற்கள் அனைத்திற்கும் ஆமா போட்டீர்கள்.

உங்கள் கட்சியில் உள்ள ஒவ்வொரு தொண்டனும் பா.ஜ.கவை நெருங்கக் கூடாது என்றும், அது ஓர் அபாயகரமான நபர்களைக் கொண்டது என்றும், உறவாடிக் கெடுப்பவர்கள் என்றும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்கள் என்றும் அவர்களுடன் உறவு கொள்ளலாகாது என்றும் உரக்கக் கூறுவது எடப்பாடியாரின் காதுகளுக்கு எட்டவில்லையா?

அல்லது எட்டிய போதும் காதில் வாங்கிக் கொள்ளாமல் அடிமட்டத் தொண்டனை அலட்சியப் படுத்துகின்றாரா?

ஒட்டுமொத்தத் தமிழகம் ஒருசேர ஒன்றிய அரசின் துரோகங்களுக்கு எதிராகப் போர்க் குரல் எழுப்பி வரும் நிலையில், தமிழ்நாட்டு மக்களுக்கும், தன் சொந்தக் கட்சித் தொண்டர்களுக்கும் எடப்பாடியார் துரோகம் இழைக்கலாமா?

நேற்று வரை எடப்பாடியாராகத் திகழ்ந்தவர் எட்டப்பராக மாறலாமா?

எதிரிக்கு மன்னிப்பு உண்டு. துரோகத்திற்கு ஒருபோதும் மன்னிப்பு கிடையாது!

மீண்டும் சந்திப்போம்
வணக்கம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்த 'நீட்' தேர்வு ஒரு சாராருக்கு மட்டுமே பயனுள்ளதாகவும், பயிற்சி மையங்களை ஊக்குவிக்கும் வண்ணமும், கிராமப்புற மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் விதமாகவும் உள்ளது. இந்த நீட் தேர்வின் காரணமாக பல மாணவர்களுடைய மருத்துவக் கனவுகள் சிதைந்து போயிருக்கின்றன. பல மாணவர்களுடைய விலை மதிப்பில்லா உயிர்களை இழந்து நாம் தவித்துக் கொண்டிருக்கிறோம். கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக நாட்டிலேயே தலைசிறந்த மருத்துவர்களை தொடர்ந்து உருவாக்கி வரும் தமிழ்நாட்டிலுள்ள மருத்துவமனைகளை நோக்கி நாட்டின் பல்வேறு பகுதிகளில் மட்டுமின்றி, பல உலக நாடுகளில் இருந்தும் உயர்தர சிகிச்சை பெற மக்கள் வருகை புரிந்தவண்ணம் இருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### மும்மொழிக் கொள்கை திணிப்பு

இதேபோல், மாநிலப் பட்டியலில் இருந்த கல்வி ஒத்திசைவுப் பட்டியலுக்கு ஒன்றிய அரசால் மாற்றம் செய்யப்பட்டதால், தேசியக் கல்விக் கொள்கை 2020ன் மூலம் மும்மொழிக் கொள்கையைத் தமிழ்நாட்டில் திணிக்க ஒன்றிய அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. தேசிய கல்விக் கொள்கையை ஏற்காததால் 'சமக்ர சிக்ஷா அபியான்' திட்டத்தின் மூலம் தமிழ்நாடு அரசுக்கு விடுவிக்க வேண்டிய சுமார் 2,500 கோடி ரூபாயை விடுவிக்காமல் வஞ்சித்து வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு, கேரளா மற்றும் மேற்கு வங்காள மாநிலங்களுக்கு ஏற்கனவே ஒப்புதல் அளித்த நிதியை வழங்காதது குறித்து நாடாளுமன்ற நிலைக்குழு தனது கடுமையான கண்டனங்களை ஒன்றிய அரசுக்கு தெரிவித்தது.

### மிகப்பெரிய வருவாய் இழப்பு

ஒன்றிய நிதிக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் மாநிலங்களுக்குப் பகிரப்படும் நிதியானது தமிழ்நாடு போன்ற பொருளாதாரத்தில் முன்னேறிய மாநிலங்களின் பங்களிப்புக்கு ஈடாக அல்லாமல் குறைவாகப் பகிரப்படுகிறது. சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்பட்ட போது, அதன் அறிமுக நிலையிலேயே எதிர்ப்பைப் பதிவு செய்த மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. எனினும், பொருளாதாரத்தில் முன்னேறிய மாநிலங்களின் கருத்துக்களை எல்லாம் புறந்தள்ளிவிட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி, உற்பத்தித் துறையில் சிறந்து விளங்கும் தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களுக்கு மிகப்பெரிய வருவாய் இழப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவில் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக விளங்கி, ஒன்றிய அரசின் வரிவருவாயில் பெரும் பங்களிப்பை தமிழ்நாடு தரும்போதிலும், நாம் பங்களிக்கக்கூடிய ஒரு ரூபாய் வரியில் 29 பைசா மட்டுமே நமக்கு நிதிப்பகிர்வாக அளிக்கப்படுகின்றது. இது மிகமிகக் குறைவு.

ஒன்றிய அரசின் வழிகாட்டுதல்படி மாநில அரசின் தீவிர மக்கள்தொகை கட்டுப்பாடு நடவடிக்கைகள் மூலம் பிறப்பு விழுக்காடு கட்டுப்படுத்தப்பட்டு சீரமைக்கப்பட்ட நிலையில், அதனைத் தண்டிக்கும் விதமாக 2026 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்த கருதியிருக்கக்கூடிய நாடாளுமன்றத் தொகுதிகள் மறுவரையறையினால் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவம் வெகுவாக குறைக்கப்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆளுநருடைய செயலை எதிர்த்து உச்சநீதிமன்றம் வரை சென்று வழக்குத் தொடுத்து, அண்மையில் தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் உரிமைகளைக் காக்கும் வகையில் கூட்டாட்சிக் கருத்தியலின் மகத்துவத்தை நாடெங்கும் பரப்பிடும் வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை நாம் பெற்றிருக்கிறோம்.

### நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையில் குழு

மாநிலங்களின் உரிமை தொடர்ந்து பறிக்கப்பட்டு வரும் இக்கட்டான சூழலில், கூட்டாட்சிக் கருத்தியலை வலியுறுத்தும் வகையிலும், ஒன்றிய, மாநில அரசுகளின் உறவுகளை, அதற்குரிய கொள்கைகளை மேம்படுத்திடவும், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விதிக்கூறுகள், நடைமுறையிலுள்ள சட்டங்கள், ஆணைகள் ஆகியவற்றை அனைத்து நிலைகளிலும் ஆராய்ந்து மறுமதிப்பீடு செய்திடவும் மற்றும் அதற்குரிய நடவடிக்கைகளை அரசுக்குப் பரிந்துரை செய்திடவும், உயர்மட்ட அளவிலான குழு ஒன்றினை அமைப்பதென்பது மிக, மிக அவசியமாக வந்திருக்கிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மாநிலங்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கவும், ஒன்றிய–மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்திடவும், உச்சநீதிமன்ற மேனாள் நீதியரசர் குரியன் ஜோசப்பை தலைவராக கொண்ட குழு அமைக்கப்படுகிறது. இதன் உறுப்பினர்களாக, இந்திய கடல்சார் பல்கலைக் கழகத்தின் மேனாள் துணை வேந்தரும், ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரியுமான அசோக் வர்தன் ஷெட்டியும், தமிழ்நாடு மாநில திட்டக் குழுவின் மேனாள் துணைத்தலைவர் பேராசிரியர் மு.நாகநாதனும் இருப்பார்.

மாநிலங்களுக்கு உரிய அதிகாரப் பகிர்வு மற்றும் நிதிப் பகிர்வை நாம் வலியுறுத்துவது தமிழ்நாட்டின் நலன் கருதி மட்டுமல்ல, பரந்து விரிந்த இந்திய திருநாட்டில் உள்ள குஜராத் முதல் வடகிழக்கு மாநிலங்கள் வரை, காஷ்மீர் முதல் கேரளம் வரை அனைத்து மாநிலங்களின் நலன் கருதியே நாம் நம்முடைய வாதங்களை முன்வைக்கிறோம்.

மாநில சுயாட்சி குறித்த விவாதங்களில் முதல் குரல் என்றுமே தமிழ்நாட்டில் இருந்து தான் ஒலிக்கத் தொடங்கும். அந்த வகையில் இன்றைய காலகட்டத்தில், மக்களாட்சிக் கருத்தியலை சூழ்ந்து இருக்கும் கருமேகங்களுக்கு இடையே தெளிவான ஒளி பாய்ச்சிட, காலம் நம்மை அழைக்கிறது" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

- இளமதி

## மாற்றம் இல்லை; ஏமாற்றமே தொடர்கிறது

"இந்தியாவில் எந்த மாநிலமும் இதுகுறித்து முயற்சிகள் எடுக்காத நிலையில், ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலத்திற்கு முன்பே, 1969 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கலைஞர், ஒன்றிய மாநில அரசுகளின் உறவுகளை ஆராயும் பொருட்டு ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி பி.வி.இராஜமன்னார் தலைமையில் உயர்மட்டக் குழுவை அமைத்தார்.

நாட்டிலேயே முதன்முறையாக ஒன்றிய – மாநில அரசின் உறவுகள் குறித்து விரிவாக ஆய்வு செய்து, 1971 ஆம் ஆண்டு இராஜமன்னார் குழு தனது அறிக்கையை வழங்கியது. அந்தக் குழுவின் முக்கியப் பரிந்துரைகளை 51 ஆண்டுகளுக்கு முன்பே, 1974ஆம் ஆண்டு ஏப்ரல் 16 அன்று இதே சட்டமன்றத்தில் தீர்மானமாகவும் தலைவர் கலைஞர் நிறைவேற்றினார்.

இதனைத் தொடர்ந்து, ஒன்றிய – மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்த ஒன்றிய அரசின் சார்பில் 1983ஆம் ஆண்டில் சர்க்காரியா தலைமையில் ஆணையம்; 2004 ஆம் ஆண்டில் உச்சநீதிமன்ற நீதிபதி பூஞ்சி தலைமையிலான குழு ஆகியவை அமைக்கப்பட்டு, அவற்றின் சார்பில் ஆயிரக்கணக்கான பக்கங்களைக் கொண்ட அறிக்கைகள் வழங்கப்பட்டும் இதுநாள் வரையிலும் எந்த மாற்றமும் இன்றி, ஏமாற்றமே தொடர்கிறது" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

## ஒன்றிய, மாநில அரசுகளின் நடவடிக்கைகள்

"அமெரிக்க நாட்டின் புகழ் பெற்ற குடியரசுத் தலைவர்களுள் ஒருவரும், அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த சட்ட மாமேதையுமான ஜேம்ஸ் மேடிசனின் கருத்தை இங்கே பதிவு செய்வது பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன். "போர் மற்றும் ஆபத்து காலங்களில் ஒன்றிய அரசின் செயல்பாடுகள் மிகவும் விரிவானதாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கும். இதுபோல், மாநில அரசுகளின் நடவடிக்கைகள் அமைதி மற்றும் பாதுகாப்பை நோக்கமாக கொண்டிருக்கும்."

நாட்டின் இறையாண்மை மற்றும் ஒற்றுமையைப் பேணிப் பாதுகாப்பது ஒன்றிய அரசினுடைய முதற்கடமை. அந்த உயரிய நோக்கத்தினை செம்மையாக செயல்படுத்திட அனைத்து மாநிலங்களும் தங்களுடைய முழுமையான ஒத்துழைப்பினை நல்கிட வேண்டும்" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

## அண்ணல் அம்பேத்கரின் கருத்து



இந்திய அரசமைப்புச் சட்டத்தை வடிவமைத்துத் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய கருத்தை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். "ஒன்றியம் மற்றும் மாநிலங்கள் இரண்டும் அரசியலமைப்பால் உருவாக்கப்பட்டவை. இரண்டுமே தத்தமது அதிகாரத்தை அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து பெறுகின்றன. ஒன்று தனக்கான துறையில் மற்றொன்றுக்கு கீழ்ப்பட்டதல்ல; ஒன்றின் அதிகாரம் மற்றொன்றின் அதிகாரத்துடன் ஒருங்கிணைக்கப்படுகிறது".

## மாநில சுயாட்சி தீர்மானத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு



சட்டப்பேரவையில் விதி 110ன் கீழ் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த மாநில சுயாட்சிக்கான தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்றக்குழு தலைவர் டி.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. வரவேற்றுப் பேசினார். அப்போது..

"ஒன்றிய பாஜக அரசு ஆட்சி பொறுப்பேற்றது முதல், மாநிலங்களின் உரிமைகளையும், அதிகாரங்களையும் தொடர்ந்து பறித்துக் கொண்டிருக்கிறது. ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே மொழி, ஒரே கல்விக் கொள்கை, ஒரே கட்சி, ஒற்றை ஆட்சி முறை என்ற சர்வாதிகாரத்தை நோக்கி நாடு போய்க்கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்கின்ற தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் மீது தொடர்ந்து தாக்குதலை தொடுத்து வருகிறது. நிதி பகிர்வில் தமிழ்நாடு வஞ்சிக்கப்படுகிறது.

மும்மொழி கொள்கை என்ற பெயரால் இந்தி மொழிக் கொள்கையை திணிக்க நினைக்கிறது. இதனால் மும்மொழிக் கொள்கையை ஏற்காவிட்டால், மாநிலங்களுக்கு நிதி வழங்க மாட்டோம் என பகிரங்கமாக ஒன்றிய கல்வி அமைச்சர் மிரட்டுகிறார். இது கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது.

மொழி என்பது மாநிலத்தின் அடையாளம், மொழி என்பது கலாச்சாரத்தின் அடையாளம், மொழி என்பது பண்பாட்டின் அடையாளம். இவற்றையெல்லாம் இந்தி திணிப்பின் மூலம் ஒன்றிய அரசு சிதைத்துக் கொண்டிருக்கிறது. தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரில் மீண்டும் குலக்கல்வியைக் கொண்டுவர முயற்சிக்கிறது. இந்திய வரலாற்றை திரித்து எழுத ஒன்றிய அரசு நினைத்துக் கொண்டிருக்கின்றது.

மருத்துவக் கல்விக்கான நுழைவுத் தேர்வில் நீட்டை நுழைத்து நம்முடைய மாணவர்களின் கல்விக் கனவை சிதைத்து கொண்டிருக்கிறது. தொகுதி மறுசீரமைப்பு (Delimitation) என்ற பெயரில் மாநிலங்களின் குரல்வளையை நெரிக்க ஒன்றிய அரசு துடித்துக் கொண்டிருக்கிறது. மாநில அரசின் நிதியில் உருவாக்கப்பட்டவை மாநில பல்கலைக்கழகங்கள். இந்தப் பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை, பேராசிரியர்களை நியமிக்க மாநில அரசுக்கு உரிமை இருக்கிறது. இதுதொடர்பாக இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 10 மசோதாக்களுக்கு ஆளுநர் அவர்கள் இசைவு அளிக்காமல் நிலுவையில் வைத்துவிட்டார். இதனால் நீண்ட நெடிய சட்டப் போராட்டம் நடத்தி, உச்சநீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டி, வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை முதலமைச்சர் பெற்றிருக்கிறார்.

சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை கிடப்பில் போட ஆளுநருக்கு அதிகாரம் இல்லை; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும் அமைச்சரவைக்கும் தான் அதிகாரங்கள் இருக்கின்றன என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்ப்பு தமிழ்நாட்டு உரிமைக்கானது மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்திய மாநிலங்களுக்குமானது. இத்தகைய தீர்ப்பை நம்முடைய முதலமைச்சர் பெற்று, மாநில உரிமைகளை நிலைநாட்டி இருக்கிறார்.

இன்றைக்கு ஒட்டுமொத்த இந்திய மாநிலங்களும் நம்முடைய முதலமைச்சரின் முன்னெடுப்புகளை உற்றுநோக்கிக் கொண்டிருக்கின்றன. உலக நாடுகளும் உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றன. பன்முகத்தன்மை கொண்ட இந்திய நாட்டின் இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்கள், பன்முகத்தன்மையை தொடர்ந்து சிதைத்துக் கொண்டிருக்கின்றனர்.

அமெரிக்க அதிபர் டிரம்ப் உலக நாடுகளுக்கு வரி விதிக்கிறார். ஆனால் அமெரிக்காவில் உள்ள மாநிலங்களின் உரிமைகளில் அவரால் தலையிட முடியாது. நம் இந்திய நாட்டில் மாநிலங்களின் உரிமைகளில் ஒன்றிய அரசு தலையிட்டுக் கொண்டிருக்கிறது. சோவியத் ஒன்றியத்தை கட்டமைத்த புரட்சியாளர் ஸ்டாலின், மாநிலம் என்பது ஒரு நாட்டினுடைய முகம், மாநில உரிமைகளில் தலையிட்டால் அந்த முகம் சிதைந்து விடும் என்றார்.

ஆனால் ஒன்றிய அரசு மாநில உரிமைகளில் தலையிட்டு மாநிலங்களுடைய முகங்களை சிதைத்துக் கொண்டிருக்கிறது. எனவேதான் மாநில உரிமைகளாக இருந்தாலும் கூட்டாட்சித் தத்துவமாக இருந்தாலும் அவற்றைக் காக்க ஒன்றிய அரசை எதிர்த்து துணிச்சலுடன் குரல் கொடுக்கக்கூடிய ஒரே முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர்தான். ஒன்றிய மாநில உறவுகளை மேம்படுத்துவதற்காக ஓய்வுபெற்ற நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையில் உயர்மட்டக்குழுவை அமைப்பதற்காக முதலமைச்சர் கொண்டுவந்திருக்கின்ற தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கின்றேன்" என்று டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. பேசினார்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 03

# காவி இருள் சூழவிடோம்! தமிழ்நாடு தலை தாழ்த்தாது!

தனது சாணக்கிய நரித் தந்திரங்களை எல்லாம் சரியாகக் கண்டுணர்ந்து, சொல்லுக்கு சொல் அம்பலப்படுத்தும் தமிழ்நாட்டை கண்டு ஆர்எஸ்எஸ், பிஜேபிக்கு அவ்வளவு ஆத்திரம்!

அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி எவ்வளவு அடித்தாலும், அதையெல்லாம் தாங்கிக்கொண்டு, தனது மனுஸ்மிருதி கனவை நிறைவேற்ற விடாமல், தன்னை எதிர்க்கும் அத்தனை மாநில அரசுகளையும் எதிர்க்கட்சிகளையும் ஒன்று திரட்டி, தினந்தோறும் தனக்கு தலைவலி தந்து கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தை, ஆட்சியிலிருந்து இறக்கி விட வேண்டும் என்று எந்தப் பழி பாவத்திற்கும் அஞ்சாமல் களமிறங்குகிறது ஆர்எஸ்எஸ், பாஜக. எத்தனை நூற்றாண்டுகளின் சதி அனுபவம்!

திமுக கூட்டணி தவிர்த்து, தமிழ்நாட்டில் உள்ள அத்தனை கட்சிகளையும் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் பாஜக கொண்டு வந்து விட்டது. சேர்ந்து நின்று மக்களிடமிருந்து வாக்கை வாங்கி பாஜக வாயில் போட சில கட்சிகள், தனித்து நின்று தனக்கு வராத வாக்குகளை பிரித்து வீணாக்க சில கட்சிகள்.

இனி ஒரு நாளும் பாஜகவோடு சேர மாட்டோம் என்று கத்திக் கூப்பாடு போட்டு வந்த எடப்பாடி, திடீரென திமுகவை தோற்கடிப்பதுதான் எங்கள் இலக்கு என்றது, வலைக்குள் மீன் சிக்கிவிட்டதைக் காட்டியது. எந்த ரெய்டு புண்ணியமோ!

அவரைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு பத்திரிகையாளர்களை சந்தித்த அமித்ஷா, எடப்பாடியின் ‘சீரிய’ தலைமையில் கூட்டணி அமைந்திருப்பதாக சொன்னார். அதிமுக தான் கூட்டணிக்கு தலைமை என்றால், எடப்பாடி தானே கூட்டணியை அறிவித்திருக்க வேண்டும்!

ஆனால் அந்த ‘சீரிய’ தலைவர் ‘ம்’ என்ற சிறிய வார்த்தையைக் கூட பேசவில்லை. பேட்டி முடியும் வரை பேசிய அமித்ஷாவின் வாயையே பார்த்துக் கொண்டு கைகட்டி அமர்ந்திருந்தார்.

சனாதனம், மும்மொழித் திட்டம், தொகுதி மறு சீரமைப்பு ஆகியவற்றைச் சொல்லி மக்களை திமுக திசை திருப்புவதாக அமித்ஷா சொன்னார்.

இந்தப் பிரச்சனைகளில், கூட்டணிக்கு தலைமை தாங்கும் அதிமுகவின் நிலை என்ன? சனாதனத்தை ஏற்கிறதா? மும்மொழித் திட்டத்தைப் போற்றுகிறதா? தொகுதி மறு சீரமைப்பு என்ற பெயரில் தமிழ்நாட்டின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் குறைக்கப்படுவதை ஒப்புக் கொள்கிறதா?

கடந்த 48 ஆண்டுகளில், ஏழு முறை வென்று ஆளுங்கட்சியாகவும், வெற்றி பெற முடியாத நேரங்களில் பெரும்பாலும் முக்கிய எதிர்க்கட்சியாகவும் விளங்கிய ஒரு கட்சியின் தலைவர் அவர். தனது கட்சிக்கு மாற்றுக் கருத்து உள்ளது என்பதை முனகக்கூட முடியவில்லை.

மோடி அரசு ஊழலுக்காக ரெய்டு விட்ட முன்னாள் மந்திரிகள் மேடையில் இருக்கும் போது, திமுக அரசு செய்துள்ளதாக கூறி பல ஊழல்களை பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் பட்டியலிட்டார் அமித்ஷா!

தமிழ்நாட்டுக்கு ஒவ்வாததாகவே ஒவ்வொரு விஷயத்தையும் செய்து கொண்டிருக்கும் பாஜக தலைவருக்கு திடீரென்று தமிழ் மீது பாசம் பொத்துக் கொண்டு வந்து விட்டது!

ஐஏஎஸ், ஐபிஎஸ் தேர்வுகளை எல்லாம் தமிழிலும் எழுதலாம் என்ற முறையை மோடி தான் கொண்டு வந்தார், திமுக கூட்டணி ஒன்றியத்தில் ஆட்சி நடத்திய போது ஏன் இதைச் செய்யவில்லை என்று குண்டு போட்டார்.

1966 ஆம் ஆண்டிலேயே, தமிழில் ஐஏஎஸ் தேர்வு எழுதலாம் என்று வந்துவிட்டது. அப்படி தமிழில் எழுதி ஐஏஎஸ் அதிகாரி ஆகி, 60 வயது வரை பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களே தமிழ்நாட்டில் இருக்கிறார்கள்! எவ்வளவு பச்சைப் பொய்.

செம்மொழி ஆய்வு நிறுவனத்தை மோடி தான் உருவாக்கினார் என கூச்சமின்றி சொன்னார். உண்மையில் செம்மொழி ஆய்வு நிறுவனம் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசால் 2006ல் நிறுவப்பட்டு, 2008ல் சென்னைக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. மோடிக்கு எந்தத் தொடர்பும் இல்லை.

திருக்குறளை உலக மொழிகளில் எல்லாம் மோடி மொழி பெயர்த்து கொடுத்திருப்பதாக வேறு புரட்டினார்! 1794 ஆம் ஆண்டிலிருந்து திருக்குறள் ஆங்கிலத்தில் 80 தடவை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 50 க்கு மேற்பட்ட மொழிகளில் திருக்குறள் உள்ளது. மோடி தான் செய்தார் என்று சொல்ல எவ்வளவு தைரியம்?

அதிமுக உள் விவகாரங்களில் தலையிட மாட்டோம் என்றார் அமித்ஷா. நேற்று வரை செங்கோட்டையனை வரவழைத்துப் பேசியது, ஓ.பன்னீர்செல்வத்துக்கு பலாப்பழம் கொடுத்துக் கொஞ்சியது, டிடிவி தினகரனை ஆரத்தழுவி குலாவியது எல்லாம் எதற்கு?

காவி இருள் சூழவிடோம்! தமிழ்நாடு தலை தாழ்த்தாது. தீ பரவட்டும்!

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

மூத்த தலைவர் தாராசிங் சித்து ஏற்றி வைத்தார்.

காவிரிப் படுகையில் பல்வேறு இடங்களில் இருந்து தியாகச் சுடர்கள் எடுத்து வரப்பட்டன.

திருத்துறைப்பூண்டியில், பி.சீனிவாச ராவ் பெயர் தாங்கி, அவரது நினைவிடத்தில் இருந்து எடுத்துவரப்பட்ட தியாக தீபத்தை மூத்த தலைவர் பஸிய பத்மா பெற்றுக் கொண்டார்.

முதன்முதலில் விவசாயச் சங்கம் தொடக்கப்பட்ட தென்பரையிலிருந்து கொண்டுவரப்பட்ட நினைவுச் சுடரை சத்யன் முகேரி பெற்றுக் கொண்டார்.

தலைவர் எம் காத்தமுத்து நினைவுச் சுடர் கொள்ளிடத்தில் இருந்து கொண்டு வரப்பட்டது. அதனை பல்தேவ் சிங் நிகல்ராவும்,

வெண்மணி தியாகிகள் நினைவுச்சுடரை விவசாய சங்க பொதுச் செயலாளர் ராவுல வெங்கையாவும்,

ஆம்பலாபட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட தமிழ்நாடு விவசாயிகள் சங்க முன்னாள் பொதுச் செயலாளர் அமரர் டாக்டர் வே.துரைமாணிக்கம் நினைவுச் சுடரை கே.டி.சிங்கும்,

நில முதலைகளால் வெட்டிக் கொல்லப்பட்ட தியாகிகள் சிவகுருநாதன், வடிவேல் பெயர் தாங்கிய நினைவுச் சுடரை ஸ்ரீகுமார் முகர்ஜியும்,

பாபநாசத்தில் இருந்து எடுத்துவரப்பட்ட தியாகி ஓலைப்பாடி கண்ணையன் நினைவுச் சுடரை ராஜேந்திர யாதவும் பெற்றுக் கொண்டனர்.

தியாகிகள் நினைவுச் சின்னத்தை திறந்து வைத்து கோ.பழனிச்சாமி அஞ்சலியைத் தொடக்கி வைக்கப் பிரதிநிதிகள் அனைவரும் மலர் தூவி வீரவணக்கம் செய்தனர்.

மாநாட்டு அரங்கத்தில் நீடாமங்கலம் கார்த்திக், கண்ணன் குழுவினர் பாரம்பரியமான நாதஸ்வர இசையை அமர்க்களமாக வழங்கினர்.

அடுத்து பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. ஜி.பாவை, எல்.நட்சத்திரா, ஏ.யாழினி, எ.தனுஷ் நேத்ரா, யு.யுவஸ்ரீ ஆகியோர் நடனமாடி பிரதிநிதிகளை வரவேற்றனர்.

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் மறைந்த அதுல் குமார் அஞ்சான் அவர்களுக்கு மாநாடு எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தியது. பின்னர் சென்ற மாநாட்டுக்கு பின்னர் இறந்த தலைவர்களுக்கு மீண்டும் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன் பிறகு பொது மாநாடு துவங்கியது. அந்த அமர்வுக்கு அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் தலைவர் ராஜன் கிஸ்ஸி சாகர் தலைமை ஏற்றார். வரவேற்பு குழுவின் தலைவர் வை.செல்வராஜ், எம்.பி. வரவேற்புரை நிகழ்த்தினார்.

கேரளா மாநில வேளாண்துறை அமைச்சர் பி.பிரசாத் மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். தமிழ்நாடு வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாநாட்டை வாழ்த்திப் பேசினார்.

ஏஐகேஎம்எஸ் பொதுச் செயலாளர் ராஜாராம் சிங் எம்.பி, ஏஐகேஎஸ் பொதுச் செயலாளர் விஜு கிருஷ்ணன், பிகேயூ தலைவர் ராகேஷ் திகாயத், பிகேயு தலைவர் ஜோகிந்தர் உக்கிரகன், கேகேயு தலைவர் தர்ஷன்பால் சிங், பிகேஎம்யு தேசிய தலைவர் நா.பெரியசாமி, ஏஐடியுசி தேசிய செயலாளர் டி.எம்.மூர்த்தி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற பொதுச் செயலாளர் இரா.திருமலை, மாணவர் மன்ற பொதுச் செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்க, வரவேற்புக் குழுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி நன்றியுரைத்தார்.

மாநாட்டில் இந்திய விவசாயம் குறித்தும், விவசாயிகள் நிலை குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

17 ஆம் தேதி மாலை நான்கு மணிக்கு நாகை அவுரி திடலில் இருந்து மாபெரும் பேரணி புறப்பட்டது. நாகை காடம்பாடி வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக் திடலில் பேரணி நிறைவடைந்தது.

பொதுக் கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, தேசியச் செயலாளர் ராமகிருஷ்ணா பாண்டா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் தலைவர்கள் உரையாற்றினர்.

**மாநாட்டுத் தீர்மானங்கள் அடுத்த இதழில்**

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வாழ்த்துரை




மாநாட்டுக்கு அழைத்துப் பங்கேற்கச் செய்ததற்காக மேடையில் இருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் உட்பட ஒவ்வொருவரையும் பெயர் கூறி அழைத்து, நன்றி தெரிவித்து அமைச்சர் தனது உரையை தொடங்கினார்.

ஒன்றிய அரசு கொண்டுவந்த வேளாண் சட்டங்களை எதிர்த்து விவசாயிகள் தளர்வற்ற போராட்டத்தை தொடங்கி நடத்தினீர்கள். ஓராண்டு காலம் நடந்த அந்த போராட்டத்தில் 700 விவசாயிகள் தமது உயிரை தியாகம் செய்தனர். எந்தத் திருத்தமும் செய்ய முடியாது என்று ஒன்றிய அரசு மறுத்த அந்தச் சட்டங்களை நீங்கள் கிழித்து தூளாக்கினீர்கள். அதற்காக உங்களுக்கு எனது வணக்கத்தை செலுத்துகிறேன்.

தமிழ்நாட்டில் குத்தகைதாரர் உரிமைகளுக்காகவும், நில சீர்திருத்தத்துக்காகவும் கம்யூனிஸ்டுகள் நீண்ட காலம் போராடி இருக்கிறார்கள். அதனை டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு ஏற்று உரிய வகையில் சட்டங்களை இயற்றி குத்தகைதாரர்களின் உரிமைகளை பாதுகாத்தது.

விலையற்ற மின்சாரத்தை கலைஞர் அரசு 28,700 விவசாயிகளுக்கு வழங்கியது. அதனை இன்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைந்த அரசு தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறது.

விவசாயப் பணிகள் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக எந்திரமயமாகிக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டு விவசாயிகள் அதில் பின்தங்கி விடக்கூடாது என்பதற்காக, அவர்களுக்கு தேவையான அத்தனை வசதிகளையும் தமிழ்நாடு அரசு செய்து கொடுத்து வருகிறது.

விபத்தில் இறந்து போன விவசாயிகள் விவசாய தொழிலாளர்களுக்கு 2 லட்சம் ரூபாய் இழப்பீடாக தமிழ்நாடு அரசு வழங்குகிறது.

இந்தியாவின் அனைத்து திசைகளில் இருந்தும், பல்வேறு மொழிகளை பேசுகிற நீங்கள், இங்கு குழுமி இருக்கிறீர்கள்.

நீங்கள் இந்த மாநாட்டில் நிறைவேற்றும் தீர்மானங்களை, எங்கள் மாநில அரசு கோரிக்கைகளாக அல்ல, ஆலோசனைகளாக எடுத்துக் கொள்ளும்.

தமிழ்நாட்டில் பொது பட்ஜெட்டில் இருந்து பிரித்து, விவசாயிகளுக்கு என்று தனி நிதிநிலை அறிக்கையை அரசு தாக்கல் செய்கிறது. எனவே விவசாயிகளின் பிரச்சனைகள் அனைத்தையும் நேரில் சென்று கேட்டறிந்து அவற்றை தீர்வு செய்யும் வகையில் நாங்கள் நிதிநிலை அறிக்கையை ஆயத்தம் செய்கிறோம்.

உங்கள் மாநாடு தரும் ஆலோசனைகளையும் ஏற்று செயல்படுத்த எங்கள் அரசு தயாராக இருக்கிறது.

மீண்டும் உங்களது மாநாட்டுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அமைச்சர் கூறினார். அவரது பேச்சை டி.எம். மூர்த்தி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

# இந்திச் சுமையினை இளைஞர் மேல் ஏற்ற வேண்டாம்–2



மே.து.ரா.

தேசியக் கல்விக் கொள்கையை ஏற்று, நவோதயா பள்ளிகள், பிரதமரின் வளரும் இந்தியாவுக்கான பள்ளிகளைத் தமிழ்நாட்டில் தொடங்கினால், நிதி உதவி பெருமளவில் கிடைக்கும் என்பதில் உள்ள மாயத்தை மறந்துவிடக்கூடாது. குறிப்பிட்ட சில தகுதி கொண்ட மாணவர்களுக்கு மட்டும் சிறப்புக் கல்வியினைத் தருவதற்காக ஒன்றிய அரசால் நடத்தப்படும் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் பள்ளிகளுக்கு நிதி உதவி செய்வதுதான் அந்தத் திட்டங்களின் நோக்கம். மாறாக, அனைத்துப் பள்ளிகளுக்கும் பயன்படத்தக்கவாறு மாநிலங்களுக்குத் தரும் நிதி ஒதுக்கீடு அல்ல அவை.

எடுத்துக்காட்டாக, 8,66,361 தொடக்கப் பள்ளிகள் உள்ள உத்திரப் பிரதேசத்தில் 35 பள்ளிகளும், 8,459 மேல்நிலைப் பள்ளிகளில் 141 பள்ளிகளும் மட்டுமே பிரதமரின் வளரும் இந்தியாவுக்கான பள்ளிகள் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஒன்றிய அரசின் நவோதயாப் பள்ளிகள் மாவட்டத்திற்கு ஒன்றுதான் நடத்தப்படுகின்றன. அதாவது, உ.பி.யில் 76 நவோதயாப் பள்ளிகளே உள்ளன. இவற்றில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையும் குறைவு.

ஒன்றிய அரசின் இந்தப் பள்ளிகள் மேல்குடியினரை உருவாக்கும் முயற்சிகளேயன்றி, அனைவருக்குமாக அமையவில்லை. இந்தியினை மூன்றாவது மொழியாக ஏற்றுக்கொண்டாலும், நவோதயா மற்றும் பிரதமர் பள்ளிகள் எங்கோ ஒன்றுதான் இருக்கும். இந்தப் பள்ளிகளில் அனைத்தும் கட்டணமின்றிக் கிடைக்கின்றன என்றாலும், 1 அல்லது 2% மாணவர்களே பயன் பெறுவர். தெளிவாகக் கூறவேண்டுமென்றால், ஏறத்தாழ 2% மாணவர் பயனடைவர் என்பதற்காக 98%த்தினர் மீது இந்தி திணிக்கப்படும். இதற்காக, இந்தித் திணிப்பையும் தேசியக் கல்விக் கொள்கையையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்துவது நேர்மையானதாகத் தெரியவில்லை.

உ.பி. போன்ற மாநிலங்களில் தமிழ் மூன்றாவது மொழியாக இருக்கும்போது, தமிழகம் மட்டும் இந்தியை ஒதுக்கிவிட்டுத் தனித்திருக்கக்கூடாது என்றும் எடுத்துக்காட்டப்படுகிறது. இந்தி பேசும் மாநிலங்கள் உள்ளிட்டு எதுவாக இருந்தாலும், தமிழர் அல்லது பிற மொழியினர் உள்ள பகுதிகளில் அந்தந்த மொழிகள் பயிற்றுவிக்கப்படுகின்றன என்பதை எவரும் மறுக்கவில்லை. ஒன்றிரண்டு பள்ளிகளில் இது இருக்கலாம். இவையெல்லாம் பெரிதும் தமிழ் அல்லது பிற மொழி அமைப்பினர் நடத்தும் பள்ளிகளாகவே இருக்கும். இது எல்லா மாநிலங்களில் உள்ள மொழிச் சிறுபான்மையினருக்கும் பொருந்துவதாகும். பொதுப் பள்ளிகளில் தமிழ் அல்லது தொடர்பில்லாத பிற மாற்று மொழிகள் மூன்றாவதாகக் கற்பிக்கப்படுகின்றனவா என்பதைத்தான் பார்க்கவேண்டும்.

அத்தகையதொரு நிலை இந்தி மாநிலங்களில் இல்லை என்பது வெளிப்படையான உண்மையாகும். மூன்றாவது மொழி என்பது அவர்களது பாடத்திட்டத்திலேயே இல்லாதபோது, வேறொரு மொழி கற்பது என்பதைக் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாது.

அய்ரோப்பிய நாடுகளில் தொடக்க நிலையில் பல மொழிகள் கற்பிக்கப்படுகின்றன, இளம் பருவத்தில் கூடுதலான மொழிகளைக் கற்பது சுமையாக இருக்காது என்றெல்லாம் உண்மைக்கு மாறாகப் பேசப்படுகிறது. அய்ரோப்பிய நாடுகளில் தாய் மொழியுடன் அறிவு மொழியாக ஆங்கிலம், ரசியன், செர்மன், பிரெஞ்சு போன்ற மொழிகளில் ஏதாவதொன்று கற்பிக்கப்படுகிறது. பெரும்பாலும் அவர்கள் கற்கும் ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகள், ஒரே மொழி இனத்தைச் சார்ந்தனவாகவே இருக்கின்றன என்பதையும் பார்க்கவேண்டும்.



இளம் அகவையில் பல மொழிகளைக் கற்றுக்கொள்வது, மாணவர் நல்ல அறிவாற்றல் வளர்ச்சியை அடையப் பயப்படும் என்று தேசியக் கல்விக் கொள்கையினை உருவாக்கிய குழுவின் தலைவரும் முன்னாள் இந்திய வானிலை ஆய்வு அமைப்பின் தலைவருமான கே. கத்தூரிரங்கன் குறிப்பிடுகிறார். இது கல்வியாளர் அல்லது உளவியல் வல்லுநர்களால் எப்போதும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

எடுத்துக்காட்டாக, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் பள்ளிகளில் ஆங்கிலம் மட்டுமே கற்றுத் தரப்படுகிறது. ரசியா, செர்மனி, பிரான்சு, சீனா போன்ற வளர்ந்த நாடுகளிலும் தொடக்க, இடைக்கல்வி நிலைகளில் இரண்டாவது மொழி என்பதே அவர்களது கல்வித் திட்டத்தில் இடம்பெறவில்லை. விலக்காக ஒன்றிரண்டு இடங்களில் இருக்கலாம்; அவ்வளவுதான். கூடுதல் மொழிகளைக் கற்பது கூடுதல் அறிவாற்றலைத் தரும் என்பது உண்மையென்றால், வளர்ச்சியடைந்த நாடுகள் இத்தகைய நடைமுறையினைப் பின்பற்றியிருக்கும்.

சமக்கிருதம் மற்றும் இந்தி அல்லாத மக்கள் மேல் சுமைகளை ஏற்றுவதற்கான மறைமுகத் திட்டங்களாகவே கத்தூரிரங்கனின் கூற்று அமைந்திருக்கிறது.

சென்னையில் உள்ள இந்திப் பரப்பு அவையில் படிப்போர் கூடி வருகின்றனர், அதனால் இந்தியைப் பள்ளிகளிலேயே கற்றுக் கொடுத்துவிடலாம் என்பது கேட்பதற்கு நன்றாகத்தான் தெரிகிறது. மக்கள் தொகை கூடும்போது, இந்தி படிப்போர் எண்ணிக்கையும் கூடுவது இயல்புதான். சென்னை இந்திப் பரப்பு அவையில் தமிழ்நாட்டிலிருந்து படிப்போர் மிகுந்தும் பிற மாநிலங்களைச் சார்ந்தோர் குறைந்தும் காணப்படுகின்றனர். தமிழ்நாட்டின் பள்ளிகளில் இந்தி கற்பிக்கப்படாவிட்டாலும், அந்த மொழியினைப் பயின்று கொள்வதற்குத் தடையேதும் இருக்கவில்லை என்பது எளிதாகவே புரிந்துவிடுகிறது. சென்னையில் உள்ள இந்திப் பரப்பு அவை தனது பணிகளைத் தொடரத் தமிழ்நாடு அரசும் மக்களும் தடைகளை ஏற்படுத்திவிடவில்லை.

விருப்பமுள்ளோர் இந்தி கற்றுக்கொள்ளும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. 2023இல் தமிழ்நாட்டில் 1.29 கோடிப் பள்ளி மாணவர் இருந்தனர். ஆனால், சென்னை இந்திப் பரப்பு அவையில் 2024 இல் இந்தி படித்தோர் 3,50,665 மாணவர்தாம். இவர்களில் தமிழ்நாட்டில் உள்ள பிற மொழி பேசுவோரும் அடங்குவர் என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். 2%க்குச் சற்று மேலான மாணவர்களின் விருப்பத்துக்காக, அனைவரையும் இந்தி படிக்குமாறு வற்புறுத்த வேண்டியதில்லை.

ஒன்றிய அரசு மற்றும் சார்ந்த நிறுவனங்களின் பணிகளுக்கான தேர்வுகளை எழுத இந்தி துணையாக இருக்கும் என்பது அவலத்தின் எல்லையாகும். இந்திய ஒன்றியத்தைப் பொருத்தமட்டில் 5 கோடிக்கு மேலாக இருப்பவை 10. இரண்டு கோடிக்கு மேல் 18. ஒரு கோடிக்கு மிகையாக 21 மாநிலங்கள் உள்ளன. ஒரு கோடிக்கும் குறைவாக இருந்தாலும், 10 சிறு மாநிலங்கள் அய்ரோப்பிய நாடுகள் பலவற்றையும்விட மக்கள் அளவில் மிகுதியானவை.

இந்த நிலையில், மாநிலங்களின் ஒன்றியமாகத் திகழும் ஒரு நாட்டில், அந்த நாட்டின் அரசு மற்றும் அரசு சார்ந்த பணிகளின் வேலைவாய்ப்புகளுக்கு ஆங்கிலம் மற்றும் இந்தியை மட்டுமே சார்ந்திருக்கவேண்டும் என்ற நிலை இருப்பது பெரும் இழுக்காகும். எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள அனைத்து மொழிகளிலும் வேலை வாய்ப்புகளுக்கான தேர்வுகள் நடத்தப்படவேண்டும் என்பதே அனைவருடைய எதிர்பார்ப்பாகும்.

ஆங்கிலம் அல்லது இந்தியில் தேர்வுகளை எழுதுகின்ற போது, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டோர் மிகுந்த பயன் பெறுவதும், வேற்று மொழியினருக்கு வாய்ப்புகள் மறுக்கப்படுவதும் கண்கூடு. ஏற்றத்தாழ்வுகளுக்கும் இது இடம் தந்துவிடுகிறது. இதனாலேயே இந்தி பேசாத மக்கள் இரண்டாம் தரக் குடிமக்களாகக் கருதப்படும் நிலை ஏற்பட்டுவிட்டது.

தமிழ்நாடு அரசு தனது குறைகளை மறைப்பதற்குத்தான் இந்தித் திணிப்பினைக் கையில் எடுத்துள்ளது என்பது அரசியல் சார்ந்த குற்றச்சாட்டாகும். விடுதலைக்கு முன்னர் 1938ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பல அரசியல் கட்சிகள் பொறுப்பில் இருந்தபோதிலும், இந்தித் திணிப்புக்கான எதிர்ப்புத் தீ அணையாமல் நீடித்து வருகிறது.

பயன்பாட்டு மொழியாக இல்லாத சமக்கிருதம் கல்வி அமைப்பில் நடுவப் புள்ளியாக இருக்கும் என்றும், சமக்கிருதத்துக்கு அப்பால்தான் மேலும் பிற மொழிகள் கற்றுத் தரப்படலாம் என்றும் தேசியக் கல்விக் கொள்கை வெளிப்படையாகவே குறிப்பதால்தான் அய்யம் எழுகிறது. சமக்கிருதத்துக்காகவே இந்தி முன்மொழியப்படுகிறது என்ற அச்சமும் தோன்றுகிறது.

இந்தித் திணிப்பினால் தமிழ் மொழி அழிந்துவிடும் என்ற நிலை என்றும் இருந்ததில்லை. கடந்த பல நூற்றாண்டுகளாகச் சமக்கிருதம் பண்பாட்டு அளவிலும், வேறு சில மொழிகள் ஆட்சி வலுவிலும் தமிழ்நாட்டில் கோலோச்ச முயன்றன. ஆனால், இவற்றையெல்லாம் மீறித்தான் தமிழ் மேலெழுந்துள்ளது. இன்றும் உயிர்ப்புடன் நிலைத்திருக்கிறது.

5300 ஆண்டுகளுக்கு முன்னரே இரும்பைப் பயன்படுத்திய ஓர் இனம், எழுத்துக்களை அறிமுகப்படுத்திய ஒரு மொழி, பிற மொழிகளின் தாக்கத்தால் தடுமாறிவிடும் என்றோ, தானாகத் தாழ்ந்துவிடும் என்றோ எவரும் நினைக்கவில்லை.

ஆனால், மாநிலங்களின் ஒன்றியமாக இருக்கும் அரசமைப்புள்ள ஒரு நாட்டில், வீணாக மொழிச் சுமையினை ஏற்றி முன்னேற்றத்தை முடக்கச் செய்துவிடக்கூடாது என்பதால்தான், எதிர்க் குரல்கள் எழுகின்றன; தடுப்புகள் உருவாகின்றன; தற்காப்புகள் வேண்டியதாகின்றன.

ஒரு மொழியை மிகுதியாகப் படிக்கவேண்டுமா என்பதல்ல சிக்கல். அந்த மொழியினால் எத்தகைய பயனும் இல்லை என்பதுதான் இங்கு முன்னிற்கிறது; திணிப்புதான் முன்தோன்றுகிறது. இந்த உண்மைகளைத்தான் பா.ச.க.வும் ஒன்றிய அரசும் இந்தித் திணிப்பாளர்களும் புரிந்துகொள்ளவேண்டும்.

## மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தில் பணிபுரியும்
## சுகாதார ஆய்வாளர்களைப் பணி நிரந்தரம் செய்திட வேண்டும்



கோவிட் காலத்தில் பணிபுரிந்து, தற்பொழுது மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தில் பணிபுரியும் நிலை 2, சுகாதார ஆய்வாளர்களுக்குப் பணி நிரந்தரம் வழங்கிட வேண்டும் எனச் சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு சுகாதார மற்றும் துப்புரவு ஆய்வாளர்கள் நலச்சங்கத்தின் சார்பில், சங்கப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா பெருந்தொற்றுக்காலத்தில் பணியாற்றி, தற்போது மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தில், தொடர்ச்சியாக 5 ஆண்டுகளாகப் பணிபுரிந்து வரும் 900 சுகாதார ஆய்வாளர்களைப் பணி நிரந்தரம் செய்திட வேண்டும்.

இதற்கு மருத்துவப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் சிறப்பு எம்.ஆர்.பி தேர்வை நடத்திட வேண்டும். கோவிட் காலத்தில் பணி புரிந்ததற்காகக் கூடுதல் மதிப்பெண்ணை வழங்கிட வேண்டும்.

ஐந்தாண்டு கால மருத்துவப் பணியில் அனுபவம் உள்ள, இந்தச் சுகாதார ஆய்வாளர்களைப் பணியில் தக்கவைப்பதன் மூலம், எதிர்காலத்தில் பெருந்தொற்றுகள் போன்றவை ஏற்படும் போது இவர்களுடைய முழுமையான, அனுபவமிக்க சேவையைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். எனவே, மக்கள் நலனையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு இவர்களுக்குப் பணி நிரந்தரம் கிடைத்திடும் வகையில் சிறப்பு எம்ஆர்பி தேர்வை உடனடியாக நடத்திட வேண்டும் எனக் கூறினார்.

இன்றைய ஊடகவியலாளர்கள் சந்திப்பில், டாக்டர் ஏ.ஆர். சாந்தி, இரா.அன்பரசு, சி.சிவகுரு. கோ.நந்தகுமார், சி.முத்துக்குமரன், பெ.நவீன் நம்பி ஆகியோர் உடன் இருந்தனர்.

# ஜெய் ஸ்ரீராம் முழக்கம் அரசமைப்புச் சட்டத்திற்கு இழுக்கு!



த.லெனின்

**மதுரை, திருப்பரங்குன்றத்தில் உள்ள அரசு உதவிபெறும் தனியார் பொறியியல் கல்லூரியில் கம்பர் குறித்த பேச்சுப் போட்டிக்கான பரிசளிப்பு விழா ஏப்ரல் 12ஆம் தேதி நடைபெற்றது.**

அந்த விழாவில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி பங்கேற்றுப் பரிசுகளை வழங்கினார். இந்த விழாவில் உரை நிகழ்த்திய ஆளுநர், தனது உரையின் முடிவில் 'ஜெய்ஸ்ரீராம்' என்ற முழக்கங்களை மூன்று முறை எழுப்பி, மாணவர்களையும் அந்த முழக்கங்களை எழுப்பும்படி கூறினார். பங்கேற்ற மாணவர்களும் அந்த முழக்கங்களை எழுப்பினர். இது தொடர்பான காணொளிக் காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவின.ஏற்கெனவே தனது செயலால் உச்ச நீதிமன்றத்தின் கடும் குற்றச்சாட்டிற்கு உள்ளான கவர்னர் அதை மறைக்கும் விதமாக இந்த முயற்சியை மேற்கொண்டாரா? ஒரு அரசமைப்புப் பதவியில் இருக்கும் அவர் இதுபோல் நடக்க நடத்தை விதிகள் அனுமதிக்கிறதா? என்ற கேள்விகள் எல்லாம் பலமாக எழுந்து வருகின்றன.

### கம்பன் யார்?

'கல்விக் கூடங்களில் கம்பர்' என்ற பெயரில் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களுக்கும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கும் மாநில அளவிலான பேச்சுப் போட்டிகள் நடந்தன.

கல்லூரி மாணவர்களுக்கு 'கம்பர் காட்டும் ராமன், கம்பர் வழியில் அறம் நிலைநிறுத்தல், என்ற தலைப்புகளிலும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இந்தப் போட்டிகளுக்குப் பல பல்கலைக்கழகங்கள் ஆதரவளித்தன. இதன் கௌரவ புரவலராக ஆளுநர் ஆர்.என். ரவி இருந்து வருவதால் இவ்விழாவில் கலந்து கொண்டு, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கிய போது தனது உரையில், "ராமாயணம் வடமாநிலங்களில் பட்டிதொட்டியெங்கும் பரவிக்கிடக்கிறது. ஆனால் துளசிதாசரைவிடப் புலமைமிக்க கம்பர் எழுதிய கம்பராமாயணம் தமிழ்நாட்டில் எங்கும் காணப்படவில்லை. இது எனக்கு மிகுந்த வருத்தத்தை அளித்தது. மேலும் தமிழ் நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் கம்பருக்கு ஏதாவது இருக்கை இருக்கிறதா? எனத் தேடியபோது அப்படி ஏதும் கிடைக்கவில்லை. என்று பேசி உள்ளார்.

திராவிட அமைப்பினரால் தெய்வங்களுக்குச் செருப்பு மாலை அணிவிப்பது, சனாதன தர்மத்தை டெங்கு மலேரியாவுக்கு ஒப்பீடு செய்வது போன்ற செயல்கள் நடந்துவருகின்றன.

நாம் என்ன செய்யு முடியும்? நம்மால் என்ன செய்ய முடியும்? என்றிருக்கக் கூடாது. இதற்குப் பள்ளிகளில் இருந்து பொறுப்பைத் தொடங்க வேண்டும். பள்ளிகளில் கம்பரைப் பற்றிய குழுக்கள் ஏற்படுத்த வேண்டும், கம்பனையும் கம்பராமாயணத்தையும் கற்பிக்கலாம் என்று குறிப்பிட்டார். ஐயோ பாவம் தமிழ்நாட்டில் அனைத்து மாணவர்களுக்கும் பள்ளி கல்வித்துறையிலும் கல்லூரிகளிலும் தமிழ் மொழியில் கம்பராமாயணம் மிகச் சிறப்பாகச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. ஆனால், மிகப்பெரும் அறிவாளி கவர்னருக்கு இது எல்லாம் தேட நேரம் இல்லை போலும்! அது மட்டுமல்ல இங்கே இராவணனுக்கு மிகப்பெரும் மதிப்பு இருக்கிறது என்பதும் திராவிட இயக்க முன்னோடிகள் ஒருவரான புலவர் குழந்தை ராவண காவியமே படைத்துள்ளார் என்பதெல்லாம் அவருக்கு அறியாத செய்திகள்!

### துளசிதாஸ் கண்ட ராமன்!

பிஹார் கல்வி அமைச்சர் சந்திரசேகர், பல்கலைக்கழகம் ஒன்றில் பேசும்போது அவத்தி மொழியில் உள்ள ராமசரித மானஸிலிருந்து 'கீழ்ச்சாதி மக்கள் கல்வி கற்றால் பாம்பு குடித்த பாலைப் போல விஷமாகி விடுவார்கள்' என்னும் அதிர்ச்சி மிகுந்த பகுதியை வாசித்துக் காட்டினார்.



சமாஜ்வாதி கட்சியைச் சேர்ந்த சுவாமி பிரசாத் மௌரியா பெண்கள், தலித்துகள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரை துளசிதாசரின் 'ராமசரித மானஸ்' பல வகையில் இழிவுபடுத்துகிறது எனக் கூறி அத்தகைய இடங்களைத் திருத்த வேண்டும் எனக் குடியரசுத் தலைவருக்குக் கோரிக்கை வைத்தார். பல இடங்களில் இதைக் கண்டித்து இப்பகுதிகளைத் தீ வைத்துக் கொளுத்தும் போராட்டங்களும் நடைபெற்றுள்ளன. நிலைமை இப்படி இருக்க ஏதோ வட மாநிலங்களில் ராமனின் ஆன்மீகம் கரைபுரண்டு ஓடுவது போலவும் துளசிதாசரின் படைப்புகள் எந்த விமர்சனத்திற்கும் அப்பாற்பட்டது என்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துவது கவர்னருக்கு அழகா? நிலைமை அங்கு அவ்வாறு இல்லை என்பதை மேலே சொன்ன இந்தச் செய்திகள் எடுத்துக்காட்டுகின்றன.

### கம்பரின் கம்பராமாயணத்தில் ராமனைப் பற்றிய விமர்சனங்கள்

கம்பன், ராமன் தனது மனைவியை நிராகரிப்பதை, சந்தேகப் பட்டதை தார்மீக மற்றதாகக் கருதுகிறார்.

வால்மீகி ராமாயணத்தில், ராமன் வாலியின் முதுகில் துரோகமாக அம்பிட்டுக் கொல்லும் போது, கம்பர் அதன் தார்மீகக் குறைபாடுகளை வெளிப்படுத்துகிறார்.

### சாதிக்கு எதிரான கம்பன்

**நீதியால் வந்ததொரு நெடும் தருமநெறி அல்லால்**
**சாதியால் வந்த சிறு நெறி அறியான் என் தம்பி**

என்று வீடணன் குறித்து ராமனிடம் கும்பகர்ணன் கூறியது சாதி, சதுர்வர்ண முறைக்கு எதிரான கம்பனின் கருத்து இதற்கு என்ன சொல்வார் கவர்னர்?

**குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு; பின், குன்று சூழ்வான் மகனொடும், அறுவர் ஆனேம்; எம்முழை அன்பின்**
**வந்த அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்;**
**புகல் அருங் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை.**' என்று பல்வேறு இனங்களைச் சேர்ந்தவர்களை எல்லாம் தன் சகோதரனாகப் பாவித்தவன் ராமன் என்று கம்பர் காட்டுகிறார். நிலைமை இப்படி இருக்க கவர்னர் இப்படிக் கதைப்பதால் எந்தப் பயனும் இல்லை. இது தமிழ்நாடு அதன் சிந்தனை தனித்துவமானது!

### கல்வி உதவிக்கு எதிராகப் பேசும் கவர்னர்

அம்பேத்கர் பிறந்த தினத்தில் அன்று பேசிய கவர்னர் தலித் மக்களுக்கு எதிரான தாக்குதல்களைப் பட்டியலிட்டு இவை எல்லாம் பாஜக ஆளும் மாநிலங்களில் இல்லாததைப் போலவும் அதற்குத் தலைமை தாங்கும் உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களையெல்லாம் தவிர்த்து விட்டு, தமிழ்நாட்டை மட்டும் எடுத்துக் கொண்டார் போலும்! இந்தக் கொடுமைகளை இடதுசாரிகளும், ஜனநாயக, முற்போக்குச் சக்திகளும் கண்டிக்கிறோம் என்றாலும் கவர்னர் வடிப்பது நீலிக் கண்ணீர். இதே கொடுமைகள் பல மடங்கு பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் நடக்கிற போது ராமாயணத்தில் வட மாநிலத்தையும் தென் மாநிலத்தையும் ஒப்பிட்ட கவர்னர் வட புலத்தில் நடைபெறும் தலித் மக்களுக்கு எதிரான வன்கொடுமை, தாக்குதல்களை ஏன் ஒப்பீடு செய்யவில்லை? கண்டிக்கவில்லை? இதில் அவரது உள்நோக்கம் புரிகிறது அல்லவா!

### பாஜக ஆளும் மாநிலங்களில் கல்வி நிலை!

குஜராத்தில் ஒரு தொடக்கப் பள்ளியில் படிக்கும் மாணவருக்குக் கணிதத்தில் 200க்கு 212 மதிப்பெண் வழங்கிய சான்றிதழ் வெளிவந்து அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஆஸ்திரேலியாவில் இந்திய மாணவர் விசாக்களைத் தவறாகப் பயன்படுத்துவதாகக் கூறி, இந்தியாவின் 5 மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன.

குஜராத், பீஹார், உத்தரப்பிரதேசம், பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய 5 மாநில மாணவர்கள் ஆஸ்திரேலியா வருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த மாநிலங்களில் அளிக்கப்படும் கல்விச் சான்றிதழும் போலியானது என்பதையும் கண்டறிந்துள்ள காரணத்தால் இந்தத் தடையை வலுப்படுத்தி இருக்கின்றனர். பிரதமரின் கல்விச் சான்றே உண்மைக்குப் புறம்பாக இருக்கும்போது அந்த மாநிலங்களைச் சார்ந்த மாணவர்களின் சான்றிதழும் அப்படித்தானா? என்ற ஐயம் எழுந்துள்ளது.

மேற்கு சிட்னி பல்கலைக்கழகத்தில் 2022ல் சேர்ந்த பஞ்சாப், ஹரியானா, குஜராத் மாணவர்களில் பெரும்பகுதியினர், படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டதால், அந்த மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களைச் சேர்க்கக் கூடாது என அந்நாட்டு அரசு 2023 ஆம் ஆண்டிலேயே அறிவுறுத்தல் வழங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.தமிழ்நாட்டில் இருந்தும் ஏராளமான மாணவர்கள் அங்கு சென்று பயின்றாலும் தமிழக மாணவர்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை என்பதும் தெளிவாகிறது. எனவே, கவர்னர் அவர்களே நாகாக்க வேண்டும்!

தமிழ்நாடு கவர்னர் ஆர்.எம்.ரவி அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்கும் கடமையிலிருந்து தவறிவிட்டார்.

அரசியலமைப்புச் சட்டத்தைக் காப்பாற்றுவதாக தான் எடுத்துக்கொண்ட உறுதிமொழியை மீறி அவர் செயல்படுவதால், குறிப்பாக மதவெறி முழக்கங்களை அவரே எழுப்பி நாட்டின் மதச்சார்பின்மைக்கு வேட்டு வைத்ததால் அவர் உடனடியாகப் பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும். அல்லது விளக்க வேண்டும். அம்பேத்கர் இயற்றிய அரசியல் சாசனத்தைக் காப்போம் என்று சொல்லும் பாஜக இதனைச் செய்வார்களா? அல்லது இதுவும் நடிப்பு தானா?

தொடர்புக்கு : 9444481703

### குதர்க்கம் பேசும் ஆளுநர்

அடிப்படைக் கல்விப் பட்டியலின மக்களுக்குக் கிடைக்கவில்லை. கல்வி அறிவு, திறமை இருந்தால் மட்டுமே முன்னேற முடியும். ரூ.1,000 கொடுப்பதாலும், பட்டம் வழங்கப்படுவதாலும் ஒன்றும் வளர்ச்சி அடைந்துவிடாது என்று திருவாய் மலர்ந்துள்ளார். பட்டிலியன மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகையை நிறுத்திய மோடி அரசு குறித்து இவர் பேச மாட்டார். ஆனால் கொடுக்கிற அரசு மீது குதர்க்கம் பேசுவார்!

## தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட அமைப்பு நிலைக் கூட்டம்

தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர் மாவட்டங்களின் அமைப்பு நிலை மேம்பாடு, கிளைகள் ஆய்வுக் கூட்டம் 10.04.2025 அன்று ராணிப்பேட்டை மாவட்ட தலைவர் சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவரும் ராணிப்பேட்டை மாவட்டச் செயலாளருமான ஏ.எஸ்.சங்கர் மேஸ்திரி துவக்க உரையாற்றினார். மாநிலப் பொதுச் செயலாளர் கோவை என்.செல்வராஜ், மாநிலச் செயலாளர்கள் இரா.துரைசாமி, சி.நந்தினி, வேலூர் மாவட்ட நிர்வாகிகள் நித்தியானந்தன், சக்கரவர்த்தி, ஜீவானந்தம் ஆகியோர் பங்கேற்றனர்.

நிறைவாகக் கட்சியின் வேலூர், ராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் ஜி.லதா எக்ஸ் எம்எல்ஏ நிறைவுரை ஆற்றினார். அதிசயம் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

# உச்சநீதிமன்றம் உடைத்துப் போட்ட மூக்கு ஒட்டப் பார்க்குமா மோடி அரசு?



ஆர்.ராமானுஜம்

**இந்திய அரசியல் சட்டம் சொல்லும் ஒரு அதிரகாரப் பொறுப்பிலுள்ள ஆளுநரின் செயல்பாடுகள் மீது, சட்டங்களின் விளக்கம், நிறைவேற்றம் குறித்து இறுதி முடிவு சொல்லும் உச்ச நீதிமன்றம் தன் கண்டனங்களைப் பாய்ச்சியுள்ளது.**




பொதுவெளி மாந்தரைச், சாமானியர்களை ஆச்சரியப் படவும் வைத்துள்ளது. ஹெச்.ராஜா, அண்ணாமலை அளவிற்கு அடிக்கடி சங்கிகளை ஆனந்த ராகம் பாடி மகிழ்வித்த ரவி பாகவதர் அவமானப்பட்டாரே எனக் காவிகள் கண்ணீர் சிந்துவது பட்டவர்த்தனமாய்த் தெரிகிறது.

சட்டங்களின் படியான முன் நிகழ்வுகளையோ (the Legal Precedents) தமிழ்நாடு அரசின் வேண்டுகோளையோ, ஊடகங்களின் விமர்சனங்களையோ, கிஞ்சித்தும் மதிக்காது திரு ரவி நடந்து கொண்ட செயல்கள் குறித்து தினமலர் நாளிதழும், ஜெயா டிவியும், ஆங்கிலத்தில் உண்மை மட்டுமே பேசும் அர்னாப் கோஸ்வாமியின் ரிபப்ளிக் டிவியும் தவிர எல்லோரும் கடிந்து பேசினர்; காறியும் துப்பினர். அவை எதுவும் தன் மீது படாதிருக்க ஆர்.என். ரவிக்கு அமித்ஷாவின் டில்லி மந்திரங்கள் உதவின. இந்த விஷயத்தில், தமிழ்நாடு அரசு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் அதன் கூட்டணி அமைப்புகள் இடையறாது குரல் கொடுத்தும் சட்டப் போர் நடத்தியும் வந்தது இந்திய ஜனனாயகம் அடைந்துள்ள ஒரு நியாயமான வெற்றிக்குக் கூட்டாட்சி அரசியல் வெற்றிக்கு (Federal Politics) நல்ல அஸ்திவாரம். தமிழ்நாட்டின் இந்தக் கூட்டு முயற்சி தொடர்தல் நாட்டுக்கே நல்லது. இந்தக் கருத்தையே கேரள முதல்வர் பினராயி விஜயனும் எதிரொலித்திருக்கிறார்.

நாட்டுக்கு நல்லது நிகழ சனாதனப் பீரங்கி ரவி என்னதான் செய்துவிட்டார்?

தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பிக் காலம் கழிந்து திரும்பி வந்த 10 மசோதாக்களை ஆளுநர் ஆர்.என்.ரவி எந்த அறிகுறியுமின்றிக் கிடப்பில் போட, காலம் கடந்து குடியரசுத் தலைவருக்க அனுப்ப உத்தேசிருப்பதாய்ச் சொல்லியிருக்கிறார். மக்களின் ஜனநாயக உரிமைகளை நெறித்து நசுக்கவிருந்ததை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. ஆளுநர் ஆர்.என்.ரவி யை இதே மாதிரிச் செயல் குறித்து முன்னரும் கூட உச்சநீதிமன்றம் கண்டித்திருந்தது. (திரு. பொன்முடியை முதல்வர் மீண்டும் அமைச்சராக்கும் நிகழ்வில்) பல்வேறு வழக்குகளில், பஞ்சாப், கேரளா ஆளுநர்களின் செயல்பாடுகள் குறித்தும் அவற்றின் சட்ட எதிர்நிலை குறித்தும் நீதிமன்றம் கருத்துச் சொல்லி இருந்தது. இந்நிலையில்தான் உச்சநீதிமன்றத்தின் இரு நீதியரசர்கள் ஜே.பி.பார்டிவாலா மற்றும் மகாதேவன் கொண்ட அமர்வு எவ்வித ஐயப்பாடுகளுக்கும் இடமின்றி 08.04.2025 அன்று தீர்ப்பொன்றை வழங்கி ரவி அவர்களுக்குக் (அவரது பின்புல தாதாக்களுக்கும் சேர்த்து) கடிவாளம் போட்டிருக்கிறது.

### ஒப்புதல் அளிக்கவே மாட்டேன்

நீட் மசோதா கவர்னரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட போது, தமிழ்நாடு அரசு நீதியரசர் ஏ.கே.ராஜன் கமிட்டி அறிக்கையையும் தங்கள் கோரிக்கைக்கு வலு சேர்க்க அனுப்பியது.

இது குறித்து கமிட்டியின் பார்வை மாலைக்கண் நோய் பாதித்தது என்று ரவி சொன்னார். சட்டப்படி, இம் மசோதா ஒன்றிய அரசின் ஆளுகைக்குச் சம்பந்தமும் கொண்டதால், ஆளுநர் அதைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பியிருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்யாமல், கம்பு ஏதும் பிடிக்காமலேயே சிலம்பு சுற்றினார் ரவி: “என்னிடம் கேட்டால், நான் என்றும், என்றுமே நீட் மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்கவே மாட்டேன்.” என்றார்.

### உச்ச நீதிமன்ற தீர்ப்பு

தமிழ்நாடு சட்டமன்றம் ஏகமனதாகவும், பெரும்பான்மை மூலமும் நிறைவேற்றியனுப்பிய 10 தீர்மானங்களை (இரண்டாம் முறையும்) நடவடிக்கை ஏதும் எடுக்காது வைத்திருந்தது “சட்ட விரோதமானதும், தன்னிச்சையானதுமாகும்.”

தன்னிடம் வரும் தீர்மானங்கள் மீது, ஒரு ஆளுநர்,

1) உடனேயே ஒப்புதல் அளிக்கலாம்

2) சட்ட வரையறை பற்றிக் கூறி மறுப்பைத் தெரிவிக்கலம்

3) ஐயங்கள், கேள்விகள் கேட்டுப் பதில் பெறலாம்

4) ஒன்றிய அரசின் வறையறைக்குள் வரும்படியாய்த் தோன்றினால் குடியரசுத் தலைவருக்குத் தன் பரிசீலனைகளையும் தெரிவித்து முடிவெடுக்கச் சொல்லி அனுப்பலாம்.

5) குடியரசுத் தலைவரும் 3 மாதங்களில் முடிவெடுக்க வேண்டும்.

இவையன்றி ஆளுநருக்கு வேறேதும் சட்டம் அனுமதிக்காத நிலையில் ஆர்.என். ரவி அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத் தீர்மானங்களைக் காலம் தாழ்த்தி அதன் மீது அமர்ந்திருப்பதை நாங்கள் நிராகரிக்கிறோம்.

மேலும், அவர் செயல்பாட்டால் சட்ட விரோதமாக தங்கிப் போன 10 மசோதாக்களையும், உச்ச நீதி மன்றத்திற்கே உரிய சட்டப்பிரிவு 142 இன் படி உள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த நீதிமன்றம் பழைய தேதியிலிருந்தே (ஆளுநரிடம் இரண்டாம் முறை சமர்ப்பித்த நாளிலிருந்தே) சட்டம் ஆனதாக அறிவிக்கிறது.

இது குறித்துக் கருத்துப் பகிர்கையில், நீதியரசர் மகாதேவன் “திரு ரவி இதுகுறித்த செயல்களில் நல்ல உணர்வுடன் செயல்பட வில்லை” என்றார்.

இப்படித் “தான் தோன்றித் தனமாகச்” செயல்பட ஒரு சாதாரணக் குடி மகன் முயலலாம். ஆனால், அரசியல் சாசனத்தின் பேரில் உறுதி ஏற்று கோடிக்கணக்கான மக்களை வழி நடத்தும் மாநிலங்களுக்கு ஒன்றிய அரசின் இணைப்பாய் இருக்க வேண்டிய “பொறுப்பானவர்” ஆளுநர் இருக்கக் கூடாதுதான். இந்த “ஆளுநர்” இனி எதை ஆளுவார் எனப் பொறுத்திருந்து பார்ப்போம்.

---

# நீட் தொடர்பாக தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்



ஜி.ஆர்.இரவீந்திரநாத்

1. அரசுப் பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டை 10 விழுக்காடாக உயர்த்த வேண்டும்.

2. அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்குத் தனியாக 3 விழுக்காடு வரை இட ஒதுக்கீடு வழங்கிட வேண்டும்.

3. தமிழ்வழிக் கல்வி பயின்றோருக்கு 20 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கிட வேண்டும்.

4. அரசுப் பள்ளி, அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு நீட் மதிப்பெண்ணில் 30 விழுக்காடுவரை கூடுதல் மதிப்பெண்ணை வழங்கலாம் (அரசு மருத்துவர்களுக்கு NEET-PG யில் அவ்வாறு வழங்கப்படுகிறது)

5. தமிழ்வழி மருத்துவக் கல்வியை உடனடியாகத் தொடங்கிட வேண்டும்.

6. Stray & Mop up கவுன்சிலிங்கிற்கு தடைபோட வேண்டும்.

7. மாணவர் சேர்க்கை தொடங்கிய பிறகு கட் ஆஃப் மதிப்பெண்ணைக் குறைக்கக் கூடாது.

8. மாணவர்களுக்கு வட்டியில்லாத கல்விக் கடன் கொடுத்திட வேண்டும்.

9. தனியார் மற்றும் நிகர் நிலை மருத்துவப் பல்கலைக்கழகங்களின் கல்வி மற்றும் இதர கட்டணங்களை 100 விழுக்காடு இடங்களுக்கும் நிர்ணயிக்க வேண்டும். இதற்கு NMC Act 2019 ல் திருத்தம் கொண்டுவர வேண்டும். இந்தச் சட்டப்படி தற்பொழுது 50% இடங்களுக்குத் தான் கட்டணங்களை நிர்ணயிக்க முடியும்.

10. கட்டணக் கொள்ளையில் ஈடுபடும் கல்வி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க, கட்டாய நன்கொடைத் தடுப்புச் சட்டத்தை வலுப்படுத்த வேண்டும்.

11. வட்டாரம் தோறும் தமிழ்நாடு அரசு இலவச உணவு மற்றும் தங்கும் வசதியுடன் கூடிய பயிற்சி மையங்களை ஏழை மாணவர்களுக்காகத் தொடங்கிட வேண்டும்.

12. தனியார் பயிற்சி மையங்களை முறைப் படுத்தவும், கட்டணத்தை நிர்ணயிக்கவும் சட்டம் இயற்ற வேண்டும்.

13. மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் உள்ள UG, PG & SS மருத்துவ இடங்களுக்கு நீட்டிலிருந்து விலக்கு பெற, தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் 2019 ல் திருத்தம் செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டும்.

அவ்வப்பொழுது நீட் ரத்து என்ற



கோரிக்கைகளை தமிழ்நாடு அரசு வைப்பதைக் கைவிட வேண்டும். விலக்கு என்பதையே வலியுறுத்த வேண்டும்.

நீட் ரத்து என்பது தனியார் மருத்துவக் கல்லூரிகள், நிகர் நிலை மருத்துவப் பல்கலைக்கழகங்களுக்கே சாதகமாக அமையும். மாணவர்கள் ஏராளமான நுழைவுத் தேர்வுகளை எழுத வேண்டிய நிலை ஏற்படும். மாணவர்களுக்கு கூடுதல் சுமை, பணச் செலவை உருவாக்கும்.

14. நீட் விலக்கு மசோதா தொடர்பாக அல்லது நீட் விலக்கு தொடர்பாக உச்ச நீதிமன்றத்தை நாடுவது பயனளிக்காது.

நீதியரசர் ஏ.கே.இராஜன் குழு அறிக்கையில் பல வலுவற்ற வாதங்கள் உள்ளன.

15. PG மாநிலக் கோட்டா இடங்களில் வசிப்பிட அடிப்படையில் இட ஒதுக்கீடு கூடாது என்ற உச்ச நீதிமன்ற அண்மைத் தீர்ப்பைச் சரி செய்ய அரசியல் சட்டத் திருத்தம் கொண்டுவர ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டும்.

16. மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கையில் நிலவும் சமத்துவமின்மையை, சமவாய்ப்பின்மையைக் களைந்திடவும், மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கை பிரச்சினை தொடர்பாக முழுமையாக, சர்வாம்ச ரீதியில் ஆராய்ந்து தீர்வுகளைப் பரிந்துரைக்க ஒரு நிபுணர் குழுவை நியமிக்க வேண்டும்.

17. மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்க நீட் விலக்கு மட்டுமே போதாதது. நீட் ஓர் பிரச்சினை. அதைவிட ஏராளமான பிரச்சினைகள் உள்ளன. எனவே, மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கை பிரச்சினை தொடர்பாக முழுமையாக, சர்வாம்ச ரீதியில் ஆராய்ந்து தீர்வுகளைப் பரிந்துரைக்க ஒரு நிபுணர் குழுவை நியமிக்க வேண்டும்.

18. ஒன்றிய அரசு மருத்துவக் கல்வியில் இந்தி, சமஸ்கிருதம் மற்றும் இந்துத்துவா கருத்தியலைத் திணிக்கிறது. அதைத் தடுத்திடவும் நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

19. பட்டியலின / பழங்குடி மருத்துவ மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகையை அதிகப்படுத்திட வேண்டும்.

20. ஏழை மாணவர்களின் கல்விக் கட்டணங்களை ஒன்றிய மாநில அரசுகள் ஏற்க வலியுறுத்திட வேண்டும்.

தொடர்புக்கு: 9940664343



டி.எம்.மூர்த்தி

**மீண்டும் ஆட்சிக்கு வந்த ட்ரம்ப், பிற நாடுகளிலிருந்து அமெரிக்கா இறக்குமதி செய்யும் பொருட்களுக்கான வரியை அதிகமாக உயர்த்தி உள்ளார்.**

# வரியை உயர்த்தி



## முக்கிய வரித் திருத்தங்கள்

- எஃகு மற்றும் அலுமினிய கட்டணங்கள்: எஃகு மற்றும் அலுமினிய பொருட்களுக்கு 25% உலகளாவிய வரி
- அமெரிக்காவுடன் வர்த்தக பற்றாக்குறை உள்ள நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 11% முதல் 50% வரையிலான வரி
- சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 145% வரி (அதாவது சீனா ஏற்றுமதி செய்யும் பொருளின் விலை 100 ரூபாய் என்றால் அதற்கு 145 ரூபாய் வரி செலுத்தி, 245 ரூபாய்க்கு அமெரிக்காவில் விற்க வேண்டி வரும்)
- இது கடும் விவாதத்துக்கு உட்பட்டு இருக்கிறது. ஏப்ரல் 15 ஆம் தேதியிலிருந்து அமலாவதாக இருந்தது. இருந்தாலும் 90 நாட்களுக்கு அதனை ட்ரம்ப் ஒத்திவைத்துள்ளார்.
- இறக்குமதி வரியை மாற்றுவதற்கு ஒவ்வொரு நாட்டுக்கும் உரிமை இருக்கிறது தானே என்று சாதாரணமாக கருதக் கூடும்.
- வணிகம் மற்றும் வரிகள் குறித்த பொது ஒப்பந்தம் (GATT) போட்டே தீர வேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்று மற்ற நாடுகளை சம்மதிக்க வைத்தது அமெரிக்காதான். அதன் விதிகளை மற்ற நாடுகள் மீறிவிடாமல் இருக்க டபிள்யூடிஓ என்ற உலக வர்த்தக அமைப்பு உருவாக்கப்படுவதற்கும் அமெரிக்கா தான் முக்கிய காரணம்.
- ஆனால் ட்ரம்ப்பின் நடவடிக்கை,WTO மற்றும் GATT விதிகளை மீறுகிறது அல்லது வளைக்கிறது. அமெரிக்காவைப் போன்ற ஒரு பெரிய சக்தி இந்த அடாவடி நடவடிக்கையில் ஈடுபடும் போது, அதைத் தடுக்கவோ தண்டிக்கவோ முடியாமல் டபிள்யூடிஓ திண்டாடுகிறது.
- டிரம்பின் கட்டண நடவடிக்கைகள், குறிப்பாக 2018–2020 மற்றும் 2025ல் முன்மொழியப்பட்டவை. இவை அமெரிக்காவை முன் நின்று உருவாக்கிய WTO மற்றும் GATTன் உணர்வு நிலையையும், விதிகளையும் மீறுவதாகவே உள்ளன.
- WTO விதிகளின் கீழ், வர்த்தக கூட்டாளிகளிடையே எந்த நாடும் பாகுபாடு காட்ட முடியாது. ஒரு நாட்டிற்கான கட்டணத்தைக் குறைத்தால், அனைத்து நாடுகளுக்கும் குறைக்க வேண்டும்
- டிரம்பின் வரி உயர்வு பெரும் பாகுபாடு கொண்டது. சீனாவிற்கு எதிரான கடுமையான வரி அதிகரிப்பைக் காண முடியும்.
- மேலும் டிரம்ப் WTOக்கு உட்படாமல் கட்டணங்களை எல்லைக்கு மேல் உயர்த்தினார்.
- தேசிய பாதுகாப்புக்காக செய்வதாக ஒரு பொய் கூறி, விதிகளில் உள்ள ஓட்டையைப் பயன்படுத்த முனைந்தார்.
- 2022ல் WTO குழு இந்த விதியை அமெரிக்கா தவறாகப் பயன்படுத்தியதாகத் தீர்ப்பளித்தன. ஆனால் அதைப் பற்றி டிரம்ப் சட்டை செய்யவில்லை. ஒருவேளை மற்ற நாடுகள் இதை செய்திருந்தால் எகிறிக்குதித்து பொருளாதார தடை வரை அமெரிக்கா சென்றிருக்கும்.
- ட்ரம்பின் வரிகள் சட்டவிரோதமானவை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. மேல்முறையீடு செய்யப்பட்டபோது, அதன விசாரிக்காமலேயே உலக வணிக அமைப்பின் (WTO) மேல்முறையீட்டு அமைப்பு முடங்கி விட்டது. புதிய நீதிபதிகள் நியமனங்களை டிரம்ப் நிர்வாகம் தடுத்தது தான் இதன் காரணமாகும்.
- எனவே விதிகள் மீறப்பட்டாலும் கூட, அதை தடுக்க திராணியற்றதாக WTO மாற்றப்பட்டிருப்பது, பெரிய சவாலாகும்.
- ஊருக்கு மட்டும் தான் உபதேசம் எனக்கு இல்லை என்று அமெரிக்கா ரவுடித்தனமாக நடந்து கொள்கிறது.

## இந்த வரி உயர்வு அமெரிக்காவையும் எ

- அதிக நுகர்வோர் விலைகள்: பிற நாடுகளிலிருந்து வரும் பொருட்களுக்கு வரிகள் (இறக்குமதி வரிகள்) விதிக்கப்படும்போது, அமெரிக்காவில் அந்தப் பொருட்களின் விலை அதிகரிக்கிறது.
- இந்த உயர்வை உற்பத்தியாளர்களும் வணிகர்களும், நுகர்வோர் தலை மீது தான் போடுகிறார்கள்.
- இதனால் மின்னணுவியல், ஆட்டோமொபைல்கள் மற்றும் மூலப்பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கிறது.
- உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாப்பதே நோக்கம் என்று கூறினாலும், இருந்தாலும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை சார்ந்திருக்கும் தொழில்களுக்கு அவை தீங்கு விளைவிக்கும்.
- இறக்குமதி செய்யப்பட்ட எஃகு மற்றும் அலுமினியத்தைப் பயன்படுத்தும் அமெரிக்க உற்பத்தியாளர்களுக்கு அதிக உற்பத்திச் செலவு ஏற்படும். மூலப் பொருள்களுக்கு தட்டுப்பாடும் ஏற்படும்.



- இது ஆலை மூடலுக்கும், தொடர்ந்து வேலை இழப்புகளுக்கும் வழிவகுக்கும்.
- அமெரிக்க வரி உயர்வுக்கு பதிலடியாக, அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி

## அமெரிக்கர்கள் ஏன் போராடுகின்றனர்?

### 1. பொருளாதார சமத்துவமின்மை:

வருமான இடைவெளி அதிகரித்துள்ளது, சராசரி தொழிலாளர்களின் ஊதியம், செலவுகளுக்கு ஏற்ப உயரவில்லை. நாட்டின் 1% பணக்காரர்களிடம் பெரும்பான்மையான செல்வம் உள்ளது.

### 2. அதிக வாழ்க்கைச் செலவு:

வீட்டுவசதி, உடல் நலம் மருத்துவமனை, கல்வி மற்றும் வாழ்வுக்கான அடிப்படைத் தேவைகள் ஆகியவற்றுக்கான செலவு சாதாரண அமெரிக்கர்களின் கைக்கு அடங்காமல் பெரிதும் அதிகரித்துவிட்டது. இது நிதி நெருக்கடிக்கு வழிவகுத்திருக்கிறது.

### 3. கடன் நெருக்கடி:

பிள்ளைகளை படிக்க வைப்பதற்காக வாங்கிய கல்விக் கடன், மருத்துவக் கடன்கள் மற்றும் கிரெடிட் கார்டு கடனால் ஈட்டிய ஊதியம் வட்டிக்கே போகிறது. தீராத கடன்களால் மன உளைச்சல், வாழ்க்கை மீது வெறுப்பு.

### 4. வேலையின்மை:

எந்திரமயமாதல்(ஆட்டோமேஷன்), அவுட்சோர்சிங் மற்றும் தொழிலாளர்களைக் தேவைக்கேற்ப வாடகைக்கு எடுத்துக் கொள்கிற ‘கிக்’ பொருளாதாரம் ஆகியவற்றால், நிரந்தர வேலைகள் பறிபோய்விட்டன.ஊதியம் பெறுவது நிச்சயமற்றதாகி



விட்டது.

### 5. பணவீக்கம், ஊதிய தேக்கம்:

பணவீக்கத்தினால் விலைகளும். கட்டணங்களும் தொடர்ந்து உயர்கின்றன. ஊதியம் அதற்கேற்ப உயராததால், மக்களின் வாங்கும் சக்தி வெகுவாகக் குறைந்து விட்டது.

### 6. சமூக பாதுகாப்பு திட்டங்களே இல்லை:

மற்ற வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில், வயது முதிர்வு, மருத்துவத் தேவைகள், குழந்தைகள் கல்வி, வேலையின்மை உள்ளிட்டவற்றுக்கு உதவி செய்யும் சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் அமெரிக்காவில் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளன.

### 7. அரசியல் மற்றும் சமூக உறுதியற்ற தன்மை:

அமெரிக்க அரசியலில் கார்ப்பரேட் பெருநிறுவனங்களின் செல்வாக்கு அதிகரித்துவிட்டது. அவை தரும் அழுத்தத்தை ஏற்று கார்ப்பரேட்டுகளுக்கு சாதகமான அம்சங்களே அரசுக் கொள்கைகளாகின்றன. தொழிற்சங்கங்கள் மீதான கடும் தாக்குதலால், அவை பலவீனப்படுத்தப்பட்டு விட்டன. தொழிலாளர் நலன் என்பதே அவர்களது குடும்பங்களின் நலன் தான். இன்று குடும்பங்கள் நட்டாற்றில் விடப்பட்டுள்ளன.

### இந்தப் போராட்டம் சமீபத்திய ஆண்டுகளில் தொடங்கியுள்ளதா?

இல்லை. நாங்கள் 99% நீங்கள் 1%”, “வால் ஸ்ட்ரீட்டை ஆக்கிரமிப்போம்” போன்ற பெருந்திரளான போராட்டங்கள் ஏற்கனவே நடந்துள்ளன.

2008 நிதி நெருக்கடியின் போது இவை நிகழ்ந்தன. நிகழ்ந்தது. வங்கிகளைச் சார்ந்து சமூக நடவடிக்கைகள் மாற்றப்பட்ட பின்பு, வங்கிகளின் வழியாகவே மக்களின் பொருளாதார சிதைக்கப்பட்டது. வங்கி கட்டண உயர்வு, கிரெடிட் கார்டு போன்றவற்றுக்கு கந்து வட்டி போன்ற உயர்வு, கடனை செலுத்த முடியாத வீடுகள் வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது, வாங்கும் சக்தியை மக்கள் இழந்தது, திவாலான வங்கிகளை அரசாங்கம் மீட்டெடுத்த அதே நேரத்தில், வாழ்வாதாரமற்றுப் போன மக்களை கைவிட்டது போன்றவை இந்தப் போராட்டங்களுக்கான காரணங்களாகும்.

# உலகை வம்புக்கு இழுக்கும் டிரம்ப்



## சீனா மீதான கொலை ‘வரி’த் தாக்குதல்

- பிப்ரவரி 1, 2025: ஃபெண்டானில் எனும் வலி மருந்து அல்லது போதை பொருளைக் காரணம் காட்டி, அனைத்து சீன இறக்குமதிகளுக்கும் புதிதாக 10% அடிப்படை வரி விதிக்கப்பட்டது
- மார்ச் 3, 2025: காரணம் சொல்லாமலேயே கூடுதலாக 10% வரி விதிக்கப்பட்டு ஒட்டுமொத்த வரியை 20% ஆக உயர்த்தப்பட்டது.
- ஏப்ரல் 2, 2025: மேலும் 34% “பரஸ்பர வரி” சேர்க்கப்பட்டது, இதன் விளைவாக அனைத்திற்கும் குறைந்தபட்ச வரி 54% ஆக இருந்தது.
- ஏப்ரல் 9, 2025: கூடுதலாக 50% வரி விதிக்கப்பட்டு, அடிப்படை வரியை 104% ஆக உயர்த்தப்பட்டது.
- கடைசியாக சீனப் பொருட்களின் மீதான குறைந்தபட்ச வரி 145% ஆக கூட்டப்பட்டது.



### சீனாவின் எதிர் நடவடிக்கை

- அமெரிக்க நிலக்கரி மற்றும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு மீது 15% வரி, மற்றும் கச்சா எண்ணெய், விவசாய இயந்திரங்கள் மற்றும் கார்கள் மீது 10% கூடுதல் வரி என சீனா உயர்த்தியது
- அமெரிக்க கோழி, கோதுமை, சோளம் மற்றும் பருத்தி மீது 15% வரியும், சோளம், சோயாபீன்ஸ், பன்றி இறைச்சி, மாட்டிறைச்சி, நீர்வாழ் பொருட்கள், பழங்கள், காய்கறிகள் மற்றும் பால் பொருட்கள் மீது 10% வரியும் விதிக்கப்பட்டது.
- அமெரிக்காவின் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு அவசியமாக தேவைப்படும் டங்ஸ்டன், டெல்லூரியம், பிஸ்மத், மாலிப்டினம் உள்ளிட்ட முக்கியமான கனிமங்களை ஏற்றுமதி செய்வதில், நான் கடுமையான கட்டுப்பாடுகளை அமல்படுத்தியது.
- அமெரிக்காவின் பல்வேறு தொழில்களுக்கு முக்கியமான ஏழு கனரக ‘ரேர் எர்த்’ எனப்படும் அரிய மண் உலோகங்கள் மற்றும் தொடர்புடைய காந்தங்களின் ஏற்றுமதியை சீனா மொத்தமாக நிறுத்தியது, இது வர்த்தக பதட்டங்களை தீவிரப்படுத்தியது.
- அமெரிக்க கார்ப்பரேட் நிறுவனங்களான பிவிஎச் கார்ப். இல்லுமினா போன்ற நிறுவனங்களை “நம்பகமற்ற நிறுவனம்“ பட்டியலில் சேர்த்தது. கூகுள் ‘நம்பிக்கையற்ற நிறுவன’மா எனவிசாரணையைத் தொடங்கியது.
- இது, ‘எங்களை தவிக்க விட்டு விட்டு, நீ மட்டும் வாழ்ந்து விடுவாயா? எங்களை வம்புக்கிழுத்தால் எங்களாலும் உனது பொருளாதார நிலையை மந்தமடையச் செய்ய முடியும்,’’ என்று காட்டுகிற உணர்திறன்வாய்ந்த அரசியல் நடவடிக்கையாகும்.

## ...வ்வாறு பாதிக்கிறது?



செய்யப்படும் பொருள்களுக்கு இறக்குமதி செய்யும் நாடு வரி விதிக்கிறது.

- அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சோயாபீன்ஸ், சோளம் மற்றும் இறைச்சி மற்றும் உற்பத்தி பொருட்களுக்கு வரி விதிக்கப்படுவதால் ஏற்றுமதி குறையும். இதனாலும் அமெரிக்காவில் தொழில் முடக்கமும் வேலை இழப்பும் ஏற்படும்.
- இறக்குமதி, ஏற்றுமதி மூலம் நாடுகளிடையே ஒரு விநியோகச் சங்கிலி உருவாகிறது. இந்த வலை பின்னலை டிரம்பின் வரும் உயர்வு சீர்குலைக்கிறது. இதனால் வெவ்வேறு நாடுகளில் தொழில் நிறுவனங்கள் நமக்குத் தேவையான கச்சா பொருட்கள் அல்லது எந்திர உபரி பாகங்கள் உள்ளிட்டவற்றை பெறுவது கடினமாகிறது. இது உற்பத்தி மந்தநிலை அல்லது தொழிற்சாலை மூடல்களுக்கு இட்டுச் செல்கிறது.







## இந்தியாவின் மீதான தாக்குதல்கள் என்னென்ன?

- இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்கா 27% கூடுதல் வரியை விதித்துள்ளது,
- இது அமெரிக்காவிற்கான இந்தியாவின் ஏற்றுமதியை பாதிக்கும்.
- சீனா உள்ளிட்ட போட்டி நாடுகள் மீது நம்மை விட அதிக வரி விதிக்கப்பட்டு இருப்பதால், மின்னணு பொருட்கள் போன்ற சில துறைகள் அமெரிக்கா விதித்த வரிகளால் பயனடையக்கூடும்.
- எவ்வாறாயினும் இந்த வரி உயர்வுகளால் 2025 –26 நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30–50 அடிப்படை புள்ளிகள் வரை எதிர்மறையான தாக்கம் ஏற்படலாம் என்று பொருளாதார வல்லுநர்கள் கருதுகிறார்கள்
- இந்த வரிகளின் தாக்கத்தைக் குறைக்க தொழில்துறை ஏற்றுமதி திறன் மற்றும் மதிப்பு கூட்டலை அதிகரிக்க வேண்டும். இதனைக் காரணம் காட்டி அடக்க விலையை மேலே குறைக்க வேண்டும் என்று சொல்லி, ஏற்கனவே தேக்கமடைந்துள்ள இந்திய தொழிலாளர்களின் சம்பளம் மேலும் குறைக்கப்படும். எஞ்சிருக்கும் கொஞ்சூண்டு ‘நிரந்தர தொழிலாளர்’ முறைமை முற்றாக ஒழிக்கப்படும்.
- வேளாண் துறை சார்ந்த பொருட்கள், குறிப்பாக உறைந்த இறால், பாஸ்மதி அரிசி மற்றும் இயற்கை தேன் போன்ற பொருட்களுக்கு அதிக வரி விதிப்பு உள்ளதால், விவசாயத் துறையும் பாதிக்கப்படும்.



## இந்தியா பதிலுக்கு எடுக்கும் நடவடிக்கை என்ன?

- பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் அமெரிக்கா சென்று இருந்தபோது ட்ரம்பை சந்தித்து பேசினார். “நியாயமான” வர்த்தக உறவுகளின் அவசியத்தை டிரம்ப் வலியுறுத்தினாராம்.
- அமெரிக்காவில் ராணுவ விமானங்கள் ஓர் ஆயுதங்களை இன்னும் அதிகமாக வாங்க வேண்டும் என்று டிரம்ப், மோடிக்கு உத்தரவிட்டுள்ளார். சீக்கிரம் செயலுக்கு வரும் பாருங்கள்.
- பயணிகள் வாகன இறக்குமதிக்கு 70% வரியும் அமெரிக்க ஆப்பிள்களுக்கு 50% வரியும், மற்றும் பல அமெரிக்கப் பொருளுக்கு இந்தியா விதிக்கும் வரி அதிகமாக இருப்பதை சுட்டிக்காட்டி அதை குறைக்க வேண்டும் என்று டிரம்ப் வலியுறுத்தினார்.
- ஏற்கனவே அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியதாக கூறி இந்தியர்களை கையில் விலங்கிட்டு அமெரிக்க அனுப்பி வைக்கிறது. இதில் இந்தியா ‘சரியானதை செய்ய வேண்டும்’ என்று டிரம்ப் நிபந்தனை விதித்தார்.
- இது என்ன? மோடி என்ன வலியுறுத்தினார் என்பதைச் சொல்லாமல் ட்ரம்ப் நம் நாட்டுக்கு இட்ட கட்டளைகளை பற்றி எழுதுகிறீர்களே என்று கேட்டால், என்னிடம் பதில் இல்லை. ஏனென்றால் மோடியும் டிரம்ப்பும் பேசியதில் ஏற்பட்ட விளைவுகள் இவைதான்!!

## அமெரிக்கர்கள் போராடுகிறார்கள், இந்தியர்கள் என்ன செய்கிறார்கள்?



- பல லட்சக்கணக்கான அமெரிக்க மக்கள் வீதிக்கு வந்து போராடுகிறார்கள்.
- அவர்களுக்குள்ள பிரச்சனைகள் அனைத்தும் நமக்கும் இருக்கின்றன. அவர்களைவிடம மோசமான நிலையில் நாம் இருக்கிறோம்.
- ஆனால் நாம் ஏன் லட்சக்கணக்கில் திரண்டு போராடவில்லை?
- மத பிரச்சனை, சாதி பிரச்சனை, கோவில் பிரச்சனை, மசூதி பிரச்சனை என எதையெல்லாம் செய்ய முடியுமோ அனைத்தையும் பேசுபொருளாக்கி பிஜேபி தாண்டவமாடுகிறது.
- நாமும் வேறு வழியின்றி அதற்கு எதிர்வினை ஆற்றுவதற்கு அதே பொருள்களில் நாமும் பேசிக் கொண்டிருக்கிறோம்.
- இடைவிடாமல் இந்தப் பிரச்சினைகளிலேயே ஆர்எஸ்எஸ் பிஜேபி மக்களின் கவனத்தை ஈர்த்து, பதட்டத்தை உருவாக்கி, கலகம் செய்து கொண்டே இருக்கிறது என்பதற்கான காரணத்தை தனியே விளக்க வேண்டுமா என்ன?

தொடர்புக்கு: 739130367

# கோயில் மனைக்கு வாடகை: சதுரடி முறையைக் கைவிட்டு பகுதி முறையை அமல்படுத்துக!



மு.அ.பாரதி

கோயில் மனையில் குடியிருப்பவர்களுக்குச் சதுரடி கணக்கில் வாடகை வசூல் செய்யும் முறையை ரத்து செய்துவிட்டுப் பகுதி முறையை அமல்படுத்த கோரி 08.04.2025 அன்று சென்னை புதுப்பேட்டை முதல் கோட்டை வரை பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு கோயில் மனையில் குடியிருப்போர் சங்கங்களின் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் சட்டப்பிரிவு 78 இன் கீழ் கோயில் நிலங்களில் பல ஆண்டுகளாய்க் குடியிருப்போருக்கு அறிவிப்புகளை அனுப்பி, குடியிருப்போரை அச்சுறுத்தி வாடகை என்று வரையறை செய்து பணம் பறிக்கும் நடவடிக்கைகளில் இந்து சமய அறநிலையத்துறை ஈடுபட்டுள்ளது. தலைமுறை தலைமுறையாய் ஏழை எளிய மக்கள் குடியிருந்து வரும் இடத்தை ஆக்கிரமிப்பு என்று அடையாளப்படுத்தி அபகரிப்பதும், சட்டத்தையும், சுற்றறிக்கைகளையும் காண்பித்து அச்சுறுத்தி வாடகை என்று வரையறை செய்து பணம் பறிப்பதும், வாடகை கொடுக்க இயலாத மக்களின் குடியிருப்புகளை இடித்துத் தரைமட்டம் ஆக்குவது, அவ்விடத்தில் வசித்து வந்த ஏழை மக்களை நிர்மூலமாக்குவது தொடர்கிறது.

இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்திற்கு உட்பட்டு வாடகை செலுத்தத் தயாராக உள்ள மக்களுக்கு நியாய வாடகையினை நிர்ணயம் செய்யாமல் இழுத்தடித்து மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தாக்குதல் நடத்துவது அறநிலையத்துறை, நீதிமன்றங்களின் வாடிக்கையாக உள்ளது. சட்டப்பிரிவு 34-அன்படி வாடகை நிர்ணயம் செய்யும் குழுவின் உறுப்பினராக உள்ள இணை ஆணையர், தானே நீதிபதியாக இருந்து சட்டப் பிரிவு 78 ன் கீழான ஆக்கிரமிப்பு நோட்டீஸ் அனுப்பும் பொறுப்பில் உள்ளது மிகப்பெரிய சட்ட முரண்பாடாகும். இச்சட்டத்தில் உள்ள முரண்பாடுகளால் ஏழை எளிய மக்கள் பெருந்துன்ப துயரத்திற்கு ஆளாகிறார்கள்.

### வாடகை நிர்ணயம் குறித்து சட்டப் பிரிவு 34- A சொல்லுவது என்ன?

இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் 1959, சட்டப்பிரிவு 34-அன்படி தான் கோயில் நிலங்களில் குடியிருந்து வருபவர்களுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்ய வேண்டும். இந்து சமய அறநிலையத்துறையின் இணை ஆணையர், சொத்து தொடர்புடைய கோயில் நிர்வாக அதிகாரி மற்றும் பதிவுத்துறையின் மாவட்டப் பதிவாளர் அடங்கிய குழு இணைந்து சட்டத்திற்கு உட்பட்டு நியாய வாடகையினை நிர்ணயம் செய்ய வேண்டும் என இந்தச் சட்டப்பிரிவு சொல்கிறது. இக்குழுவினால் நிர்ணயம் செய்யப்பட்ட நியாய வாடகை குறித்த உத்தரவு, சொத்து தொடர்புடைய கோயிலின் நிர்வாக அதிகாரியால் பிறப்பிக்கப்பட்டு குழு நிர்ணயித்த வாடகையினைக் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் செலுத்துமாறு குடியிருந்து வருபவருக்குத் தெரிவிக்க வேண்டும். குழு நிர்ணயித்த வாடகைத் தொகை நியாகமாக இல்லை எனக் குடியிருந்து வருபவர் கருதினால் இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் 1959, சட்டப் பிரிவு 34-A 3 ன்படி நியாய வாடகையினை நிர்ணயம் செய்யக் கேட்டு முப்பது நாட்களுக்குள் அறநிலையத்துறை ஆணையரிடம் முறையீடு செய்ய சட்டத்தில் இடம் உண்டு.

குடியிருந்து வருபவருக்கு வாய்ப்பு அளித்து, அவரின் முறையீட்டின் மீது உரிய விசாரணை நடத்தி "தான் சரி என்று எண்ணுகின்ற" (pass such order as he thinks fit ) உத்தரவினை அறநிலையத்துறை ஆணையர் பிறப்பிப்பார் என விதியில் கூறப்பட்டுள்ளது முரண்பாட்டின் மொத்தமாக உள்ளது. சட்டப்படியான வாடகை நிர்ணயம் என்பதற்குப் பதிலாக, தான் சரி என்று எண்ணுகின்ற என்ற வார்த்தை விளையாட்டால் குடியிருக்கும் மக்களுக்குப் பாதிப்புகளே அதிகம். வாடகை நிர்ணயம் குறித்து அறநிலையத்துறை ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், முறையீடு செய்தவருக்கு அதிருப்தி ஏற்பட்டால், ஆணையரின் உத்தரவு கிடைக்கப்பெற்ற 90 நாட்களுக்குள் உயர்நீதி மன்றத்தில் முறையீட்டு மனு செய்யலாம் என இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் 1959, சட்டப் பிரிவு 34-A 5 ல் குறிப்பிடப்பட்டுள்ளது.



### ஆக்கிரமிப்பு குறித்து சட்டப் பிரிவு 78 சொல்லுவது என்ன?

அறநிலையத்துறையின் துணை ஆணையர், தனது ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள அறநிலையத்துறைக்குச் சொந்தமான இடத்தில் உரிய அனுமதி இல்லாமல் குடியிருந்து வருபவர் குறித்த உண்மைத் தகவல்களை உரிய ஆதார ஆவணங்களோடு இணைத்து இணை ஆணையர் நீதிமன்றத்தில் புகாராக மனு அளிக்க வேண்டும். இந்தப் புகார் மனு மீது இணை ஆணையர் நீதிமன்றத்தில் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் சட்டப் பிரிவு 78 (4) வரையறை செய்கிறது. புகாரில் உண்மையிருப்பதாக இணை ஆணையர் விசாரணையில் தெரியவந்தால் குடியிருப்பவரை ஆக்கிரமிப்பாளர் என அறிவித்து நிலங்களில் இருந்து வெளியேற்றிட இணை ஆணையர் நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்படும். வழக்கு நிலுவையில் உள்ள வழக்கிடைக் காலத்தில், "தான் வரையரை செய்யும் தொகையினை" (amount as may be specified by him தனது நீதிமன்றத்தில் செலுத்த உத்தரவிடும் அதிகாரம் (சர்வாதிகாரம்) இணை ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்திக் குடியிருப்பவரை மிரட்டிப் பணம் பறிக்கும் நடவடிக்கைகள் பல இடங்களில் தொடர்கின்றன. இணை ஆணையர் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்படும் இறுதி உத்தரவினை எதிர்த்து, உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஆறு மாதத்திற்குள் இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் சட்டப் பிரிவு 79 (2) ன் கீழ் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிவாரணம் பெறுவதற்கும் வழிவகை உண்டு.

சட்டப்பிரிவு 78 ன் கீழ் நடவடிக்கைகள் என்று அறிவித்து, கோயில் இடத்தில் குடியிருந்து வரும் மக்களிடம் 20 வருடங்களுக்கு வாடகை நிலுவைத்தொகை செலுத்த வேண்டும் எனவும், வழக்கு நிலுவையில் உள்ள போதே சொத்துப் பயன்பாட்டிற்கான இழப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டும் எனவும், வசூல் செய்யப்படுகிறது. வாடகைத் தொகையில் குறைந்தபட்சம் 20 மாதங்களுக்கு வைப்புத்தொகையாக (Advance as security cover) செலுத்த வேண்டும் என நிர்பந்தம் செய்யப்படுகிறது.

காலமுறையாக உயர்த்தப்படும் வாடகையினைச் செலுத்தவும், புதிதாக வாடகை மறுநிர்ணயம் செய்யும் போது அதனைச் செலுத்த சம்மதித்தும், கோயில் நிர்வாகத்திற்கு எதிராகச் செயல்படமாட்டேன் என்ற உறுதிமொழி கொடுக்கவும் அப்பாவி மக்கள் நிர்பந்திக்கபடுகிறார்கள். வங்கிகளில் பெறப்படும் Know Your Client படிவங்களைப் போல ஆதார் அட்டை உள்ளிட்ட Know your tenant படிவங்கள் வலுக்கட்டாயமாக வாங்கப்படுகிறது. இதோடு நில்லாமல் நிர்வாகச் செலவு என்று சொல்லி பணம் வசூல் செய்யப்படுகிறது. இதற்கெல்லாம் ஒப்புக்கொண்டால் மட்டுமே சட்டப்பிரிவு 78ன் கீழான நடவடிக்கைகளை இணை ஆணையர் நிறுத்திகிறார். இந்த விதிமுறைகளை ஏற்றுப் பணம் செலுத்த முடியாத ஏழை மக்கள் நிலங்களில் இருந்து விரட்டப்படுகிறார்கள். தாங்கள் குடியிருந்து வரும் இடம் கோயிலுக்குச் சொந்தமானது தானா? என்பதைத் தெரிந்து கொள்வதற்கான சட்டப்பூர்வ வாய்ப்பையும் கோயில் நிர்வாகங்கள் மக்களுக்கு வழங்குவதில்லை.

இணை ஆணையர் நீதிமன்றங்களின் தீர்ப்புகளை எதிர்த்து சிவில் நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்யும் வாய்ப்புகள் இருந்தாலும், இச்சட்டத்தில் உள்ள முரண்பாடுகளால் கோயில் நிலங்களில் வசித்துவரும் மக்கள் பெரும் பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றனர். இணை ஆணையர் நீதிமன்றங்களின் இத்தகைய மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு தமிழக அரசுதுணையாகவும், தூண்டுகோலாகவும் இருப்பதை நிறுத்திவிட்டு மக்களின் அடிப்படை வாழ்வாதார உரிமையினைப் பாதுகாக்க வேண்டும். கோயில் நிலங்களில் குடியிருந்து வரும் மக்களின் வாழ்க்கையைப் பாதுகாக்கவும், சர்வாதிகார நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கும் சட்டப் பிரிவுகளை நீக்கவும் தொடர் போராட்டங்களை முன்னெடுப்பது தற்போதைய அவசர அவசியமாகும்.

தொடர்புக்கு: 9865370777

---

**கோரிக்கைகளை வலியுறுத்தி**

## தமிழ்நாடு கோவில் மனை குடியிருப்போர் சங்கங்களின் கூட்டமைப்பினர் பேரணி

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் நேரில் மனு**



தமிழ்நாடு கோவில் மனை சார்ந்து மற்றும் சாராத மனைகளில் குடியிருப்போர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில், கோவில் மனைக்குச் சதுர அடிக்குப் பெறப்படும் வாடகையை ரத்து செய்து, பழைய வாடகை முறை அமல்படுத்த வேண்டும். பழைய வாடகை முறையில் தற்போது குடியிருப்பவருக்கே நிபந்தனையின்றிப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும். அத்தியாவசியத் தேவைகளான குடிநீர், கழிவுநீர், மின் இணைப்பு பெறுவதற்குத் தடையில்லாச் சான்று பெறுவதற்கும், அதனை கோவில் பெயரில் மாற்றுவதைத் தடை செய்ய வேண்டும்.

ஆந்திரா, கர்நாடக மாநிலங்களைப் போன்று, இனாம் ஒழிப்புச் சட்டத்தில் திருத்தம் செய்து, 1965 இல் பட்டா பெற இயலாதவர்கள், பட்டா பெற வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் உள்ள கோவில் மனைகளில் குடியிருப்போர், கடைகள் வைத்திருப்போர் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில், கோட்டை நோக்கிப் பேரணி நடைபெற்றது.

இதில் மாநிலத் தலைவர் வி.ஏ.பாலசுப்பிரமணியன், மாநிலப் பொருளாளர் எஸ்.ஏழுமலை ஆகியோர் தலைமையில் நடைபெற்ற பேரணியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் துவக்கி வைத்தார். சிறப்பு அழைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவருமான தொல்.திருமாவளவன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

பின்னர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், துணைச் செயலாளர் நா.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ராமச்சந்திரன், க.மாரிமுத்து மற்றும் மாநிலத் தலைவர் வி.ஏ.பாலசுப்ரமணியன், மாநிலப் பொருளாளர் எஸ்.ஏழுமலை ஆகியோர் கோட்டையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்துக் கோரிக்கை மனு அளித்தனர். முன்னதாக நடைபெற்ற பேரணியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோவில் மனையில் குடியிருப்போர் சங்கக் கூட்டமைப்பினர் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நூறு நாள் சம்பள பாக்கியை உடனே வழங்கக் கோரி விவசாயத் தொழிலாளர் சங்கம் தமிழ்நாடு தழுவிய ஆர்ப்பாட்டம்

**மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு, தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டிய நிதி பாக்கி 4,034 ஆயிரம் கோடி ரூபாயை உடனடியாக விடுவிக்க வேண்டும். நூறு நாள் வேலைக்கான நிதியைக் குறைத்துத் திட்டத்தை முடக்காதே என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் ஒன்றிய அரசு அலுவலகம் முன்பாக மாநில அளவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் தொடர்ச்சி.**




**விருதுநகர்:** விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு, கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் பாலமுருகன் தலைமையில், தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட துணைச் செயலாளர் செந்தில்குமார், ஏஐடியுசி மாவட்ட தலைவர் சமுத்திரம் ஆகியோர் பேசினார்கள். மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், இடைக்கமிட்டிச் செயலாளர்கள் சக்கணன், செல்வம், முனியசாமி, கலைவாசன், சுவாமிநாதன், இளைஞர் பெருமன்ற மாவட்ட தலைவர் டிமிட்ரோ, மாதர் சங்க மாரீஸ்வரி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

◆ இராஜபாளையம் கிழக்கு ஒன்றியம் எஸ்.இராமலிங்கபுரம் ஊராட்சி அலுவலகம் முன்பு, விதொச அய்யனார் தலைமையில், சிபிஐ மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் வி.இரவி, விதொச மாவட்டச் செயலாளர் வரதராஜன், ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் முத்துமாரி, இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் பகத்சிங், இடைக்கமிட்டிச் செயலாளர்கள் கணேசமூர்த்தி, இராமச்சந்திரன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

**திருப்பூர்:** திருப்பூர் மாவட்டம் அவிநாசி, காங்கேயம் ஒன்றியத்திற்கு உட்பட்ட பாலசமுத்திரம் புதூர் ஊராட்சி, சிவன்மலை ஊராட்சி, கீரனூர் ஊராட்சி, ஊத்துக்குளி, உடுமலை ஒன்றியம், குடிமங்கலம், தாராபுரம், பொங்கலூர் உள்ளிட்ட 9 மையங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, கட்சி மாவட்டச் செயலாளர் கே.எம்.இசாக், சங்கத்தின் திருப்பூர் மாவட்டச் செயலாளர் வி.பி.பழனிசாமி, மாவட்ட தலைவர் பி.ரகுபதி, மாவட்ட துணைச் செயலாளர் ஜி.ரவி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பி.நதியா, ஏ.ஜி.சண்முகம், வி.சௌந்தரராஜன், சி.சுப்பிரமணியன் மற்றும் 100 நாள் வேலைத் திட்ட தொழிலாளர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**வேலூர்:** குடியாத்தத்தில் ஒன்றிய துணைச் செயலாளர் ஆர்.வேலாயுதம், மாவட்டத் துணைத்தலைவர் டி.மணியரசன் தலைமையில், ஆர்ப்பாட்டத்தை விளக்கி சங்க மாவட்டச் செயலாளர் கே.சி.பிரேம்குமார், துணைச் செயலாளர் கே.ராமச்சந்திரன் உள்ளிட்டோர் பேசினர்.

குடியாத்தம் ஒன்றியம் விழுதோன் பாளையம் ஊராட்சி மன்ற அலுவலகம் முன்பு, கே.வி.குப்பம் ஒன்றியத் தலைவர் பி.விமலா தலைமையில், சிபிஐ வேலூர் மாவட்ட துணைச் செயலாளர் துரை செல்வம், ஒன்றிய நகரச் செயலாளர் டி.ஆனந்தன் விதொச மாவட்ட துணைச் செயலாளர் இரா.பிச்சமுத்து ஆகியோர் பேசினார்கள்.

**நாகை:** கீழையூர் கடைத்தெரு பகுதியிலிருந்து சிபிஐ மாநிலக் குழு உறுப்பினர் டி.செல்வம் தலைமையில், பேரணியாகப் புறப்பட்டு கீழையூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பாக, சங்க ஒன்றியச் செயலாளர் வீ.சுப்ரமணியன் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாவட்டச் செயலாளர் கே.பாஸ்கர் கோரிக்கையை விளக்கிப் பேசினார். இதில் சிபிஐ ஒன்றியச் செயலாளர் எஸ்.காந்தி, விவசாயச் சங்க மாவட்ட துணைச் செயலாளர் ஏ.இராமலிங்கம், ஒன்றியச் செயலாளர் எம்.ஆஜா அலாவுதீன், சிபிஐ ஒன்றிய துணைச் செயலாளர் வி.எஸ். மாசேதுங் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.




**செங்கல்பட்டு:** செங்கல்பட்டு மாவட்டம் சித்தாமூர் ஒன்றிய பிடிஓ அலுவலகம் முற்றுகைப் போராட்டம், மாவட்டச் செயலாளர் பி.எஸ்.ராமலிங்கம் தலைமையில், சங்கத்தின் முன்னாள் மாநிலப் பொதுச் செயலாளர் பி.எஸ்.எல்லப்பன் கண்டன உரை ஆற்றினார். விவசாயச் சங்கத்தின் மாவட்டப் பொறுப்பாளர் வி.ஏ.ஏழுமலை, மாவட்ட துணைத் தலைவர்கள் கீ.கதிர்வேல், பி.துரை, மணவாளன், பூமிலிங்கம், ஆதிகேசவன் முன்னிலையில் நடைபெற்றது.

**கரூர்:** கரூர் தலைமைத் தபால் நிலையம் முன்பாக, மாவட்டச் செயலாளர் ஆர்.தங்கவேல் தலைமையில், கட்சியின் மாவட்டச் செயலாளர் கே.என்.நாட்ராயன், மாவட்டப் பொருளாளர் ஆர்.ராஜேந்திரன், சங்கத்தின் மாவட்டத் தலைவர் பி.பாலன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.மோகன்குமார், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.லட்சுமி காந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கிருஷ்ணகிரி:** கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகில், சங்கத்தின் தலைவர் எஸ்.கண்ணு தலைமையில், கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் டி.சின்னசாமி, விவசாயச் சங்கத்தின் சார்பாக சிவராஜ், விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ஆர்.சேகர், மாவட்ட துணைத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ராமமூர்த்தி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

**ஆண்டிபட்டி:** ஆண்டிபட்டி தபால் நிலையம் முன்பு, கட்சியின் மூத்த தோழர் டி.பெருசு தலைமையில், கட்சியின் ஒன்றியச் செயலாளர் பா.பிச்சைமணி, நகரச் செயலாளர், க.முனீஸ்வரன், மாவட்ட துணைச் செயலாளர் வே.பரமேஸ்வரன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

**பட்டுக்கோட்டை:** பட்டுக்கோட்டை தலைமை அஞ்சலகம் அருகில் ஒன்றியச் செயலாளர் வீ.பாலசுப்பிரமணியன், ஒன்றியத் தலைவர் எஸ்.தனசீலி தலைமையில் நடைபெற்றது. ஆர்பாட்டத்தை மாவட்டச் செயலாளர் சி.பக்கிரிசாமி தொடங்கி வைத்தார். விவசாயச் சங்க மாவட்ட துணைத் தலைவர் அ.கலிய பெருமாள் முடித்து வைத்துப் பேசினார்.

கட்சியின் ஒன்றியச் செயலாளர் க.பூபேஷ்குப்தா, பட்டுக்கோட்டை நகரச் செயலாளர் எம்.எம்.சுதாகர், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்டச் செயலாளர் இள.குமணன், தொழிற்சங்கத் தலைவர் ந.வீரபாண்டியன், சிவ.சிதம்பரம் ஆகியோர் பேசினார்கள்.

## தியாக சீலர் பி.சீனிவாசராவ் 118வது பிறந்தநாள் விழா



விவசாயிகளின் விடிவெள்ளி தியாக சீலர் பி.சீனிவாசராவ் 118 வது பிறந்தநாள் விழா மற்றும் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின், 2025 ஆம் ஆண்டு உறுப்பினர் பதிவு இயக்கம், தேனி மாவட்டம் உத்தமபாளையம் ஒன்றியக் குழு சார்பாக, தம்மிநாயக்கன்பட்டி கிளையில் பொறுப்பாளர் ஏ.ஆர்.லட்சுமணன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் விதொச மாவட்டச் செயலாளர் என்.ராஜேந்திரன், ஏஐஒய்எப் ஒன்றியத் தலைவர் வீ.மணிகண்டன், விச ஒன்றியத் தலைவர் ஆர்.சதீஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

◆ திருச்செங்கோடு கட்சி அலுவலகத்தில் புகழஞ்சலி செலுத்தப்பட்டது. விதொச உறுப்பினர் பதிவு துவக்க விழா மற்றும் பேரவைக் கூட்டம் மாவட்ட அமைப்பாளர் சி.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது. சு.மகேந்திரன் மாநிலச் செயலாளர் சு.மகேந்திரன் சிறப்புரை ஆற்றினார். எஐடியூசி மாவட்ட தலைவர் எஸ்.ஜெயராமன் நிறைவுரை ஆற்றினார்.

## தனியார் தொழிற்சாலைகள் ஆக்கிரமித்த 10 ஏக்கர் நிலம் மீட்பு





### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தொடர் போராட்டம் வெற்றி!

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் தாலுகா, வெண்டையம்பட்டி கிராமத்தில் பிளாஸ்டிக் மறுசுழற்சி செய்யும் தனியார் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் பிளாஸ்டிக் கழிவுகளை அருகில் உள்ள பொதுக் குட்டையில் வெளியேற்றி வந்தது.

மேய்ச்சலுக்குச் சென்ற 30க்கும் மேற்பட்ட கால்நடைகள் விஷத்தன்மையாக மாறிவிட்ட நீரை அருந்தி உயிரிழந்தது.

இதனைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலாளர் இரா.முகில் தலைமையில் தொடர் போராட்டங்கள் நடத்தினர்.

தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தை முடிவின் அடிப்படையில், ஆய்வு மேற்கொண்ட மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள், சோழா எக்கோ பாலிமர் நிறுவனம் மட்டுமல்லாது, டயர் உற்பத்தித் தொழிற்சாலை, மாடர்ன் ரைஸ் மில், பேப்ரிகேஷன் என ஆறு தனியார் தொழிற்சாலைகள் சட்டவிரோதமாக நீர்நிலைப் பகுதிகளை ஆக்கிரமிப்புச் செய்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்நிலையில் 15.04.2025 அன்று, பூதலூர் வட்டாட்சியர் தலைமையில் வருவாய்த்துறை, காவல்துறை அதிகாரிகள் தனியார் தொழிற்சாலைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றி 10 ஏக்கர் நிலத்தை மீட்டு உள்ளனர். இது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தொடர் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

## பட்டுக்கோட்டையில் விதொச ஆர்ப்பாட்டம்



தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில், மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் பட்டுக்கோட்டை தலைமை அஞ் சலகம் அருகில் ஒன்றியச் செயலாளர் வீ.பாலசுப்பிரமணியன், ஒன்றியத் தலைவர் எஸ்.தனசீலி தலைமையில் நடைபெற்றது. ஆர்பாட்டத்தை மாவட்டச் செயலாளர் சி.பக்கிரிசாமி தொடங்கி வைத்தார். விவசாயச் சங்க மாவட்ட துணைத் தலைவர் அ.கலிய பெருமாள் முடித்து வைத்துப் பேசினார்.

கட்சியின் ஒன்றியச் செயலாளர் க.பூபேஷ்குப்தா, பட்டுக்கோட்டை நகரச் செயலாளர் எம்.எம்.சுதாகர், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்டச் செயலாளர் இள.குமணன், தொழிற்சங்கத் தலைவர் ந.வீரபாண்டியன், சிவ.சிதம்பரம் ஆகியோர் பேசினார்கள்.

## பள்ளிக்கரணையில் சிபிஐ கிளைக் கூட்டம்




பள்ளிக்கரணை மீனாட்சி நகர் சிபிஐ கிளையின் உறுப்பினர்கள் புதுப்பித்தல் சேர்த்தல் கிளைக் கூட்டம் ஆர்.பரத்குமார் தலைமையில் 13.4.2025 இல் நடைபெற்றது. 2025ம் ஆண்டுக்கான உறுப்பினர் எண்ணிக்கை 16 என இறுதி செய்யப்பட்டது. கூட்டத்தை சிபிஐ மாநிலக் குழு உறுப்பினர் எஸ்.ஏழுமலை மாவட்டக் குழு இரா.அழகேசன் தொகுதிச் செயலாளர் ஜி.கண்ணதாசன் கலந்து கொண்டு வழி நடத்தினர். கூட்டத்தில் நகரிலுள்ள பிரச்சனைகள் விவாதிக்கப்பட்டுக் கிளைச் செயலாளர் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்க மாவட்டத் தலைவர் த.பாஸ்கரன் பணி நிறைவு பாராட்டு விழா




தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் த.பாஸ்கரன் அவர்களுக்குப் பணி நிறைவு பாராட்டு விழா, தஞ்சை ஏஐடியுசி அலுவலகத்தில் நடைபெற்றது. முன்னாள் மாவட்ட தலைவர் இள.குமணன் தலைமையில், சங்கத்தின் மாநிலப் பொதுச்செயலாளர் இரா.சத்தியமூர்த்தி, ஏஐடியுசி மாநிலச் செயலாளர் சி.சந்திரகுமார், முன்னாள் மாநில துணைத் தலைவர் தி.திருநாவுக்கரசு, தமிழ்நாடு ஆய்வக உதவியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் இரா.இரவீந்தின், ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் இரா.தில்லைவனம், மாவட்ட தலைவர் வெ.சேவைய்யா, மாவட்டப் பொருளாளர் தி.கோவிந்தராஜன், வங்கி ஊழியர் சங்கத்தின் க.அன்பழகன், கவிஞர் வல்லம் தாஸ்பால், ஏஐடியுசி தெரு வியாபாரிகள் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ஆர்.பி.முத்துக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். த.பாஸ்கரன் ஏற்புரை ஆற்றினார்.

## தா.பாண்டியன் ஐந்தாம் ஆண்டு நினைவு புகழஞ்சலிக் கூட்டம்




மணப்பாறை கோவில்பட்டி சாலை கட்சி அலுவலகத்தில் தா.பாண்டியன் ஐந்தாம் ஆண்டு நினைவு புகழஞ்சலிக் கூட்டம், கட்சியின் ஒன்றியச் செயலாளர் தங்கராசு தலைமையில் நடைபெற்றது. இதில் புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி, நகரச் செயலாளர் ஜனசக்தி உசேன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணைச் செயலாளர் இந்திரஜித், கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர்கள் சௌக்கத் அலி, ராஜேந்திரன், சித்திரை பெருமாள், நல்லுசாமி, நகர துணைச் செயலாளர் திருநாவுக்கரசு உட்பட கட்சி நிர்வாகிகள் புகழஞ் சலி செலுத்தினர்.

## சிபிஐ கிளை மாநாடு

அரியலூர் மாவட்டம் செந்துறை வட்டம் ஆலத்தியூரில் து.காசிநாதன் தலைமையில் கிளை மாநாடு நடைபெற்றது. கட்சியின் முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் டி.தண்டபாணி கட்சிக் கொடியை ஏற்றி வைத்தார். நடைபெற்ற வேலைகளை கிளைச் செயலாளர் கே.சிவக்குமார் முன்வைத்தார். அரியலூர் ஒன்றியச் செயலாளர் து.பாண்டியன் துவக்க உரையாற்றினார். கிளைச் செயலாளராக து.காசிநாதன், துணைச் செயலாளராக ரா.செல்வராசு, பொருளாளராக தொ.கொளஞ்சி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## 100 நாள் தொழிலாளர்கள் தொடர் வேலை நிறுத்தம்

### பவானிசாகர் தொகுதி நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு

பவானிசாகர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட 100 நாள் வேலைத் திட்ட தொழிலாளர்கள் சங்க நிர்வாகிகள் கூட்டம் சத்தியமங்கலம் சங்க அலுவலகத்தில் சங்கத்தின் தலைவர் பி.எல்.சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இதில் சங்க மாநிலச் செயலாளர் மகேந்திரன், மாவட்டச் செயலாளர் சி.கே.முருகன், சங்க ஒன்றியச் செயலாளர்கள் ரவிச்சந்திரன், லட்சுமி, ஜீவா சிவகாமி, காளசாமி, சிவண்ணா ஆகியோர் முன்னிலையில் வகித்தனர்.

கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ், ஒன்றிய அரசு தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டிய நிதி பாக்கி 4,034 ஆயிரம் கோடி ரூபாயை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

பவானிசாகர் தொகுதியில் சத்தியமங்கலம், பவானிசாகர், தாளவாடி ஆகிய வட்டாரங்களில் 40 ஊராட்சிகளில், சுமார் 40 ஆயிரம் விவசாயத் தொழிலாளர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். நான்கு மாதங்களாகச் செய்த வேலைக்குக் கூலி வழங்கப்படாததால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களும் பல கட்ட போராட்டங்களை இதற்காக நடத்தினார்கள்.

இந்த மூன்று வட்டாரங்களைச் சேர்ந்த இந்தத் தொழிலாளர்கள், நிலுவையில் உள்ள கூலி பாக்கியை வழங்கும் வரை வேலைக்குச் செல்வதில்லை எனவும், தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது எனவும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் மாவட்டச் செயலாளர் சு.மோகன்குமார், துணைச் செயலாளர் சக்திவேல், ஒன்றியச் செயலாளர் பி.ஏ.வேலுமணி, எஸ்.சி.நடராஜ், எம்.சுரேந்தர், தாளவாடி மோகன், கடம்பூர் ராமசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பீடித் தொழிலுக்கு ஜி.எஸ்.டி வரியைக் குறைக்க வலியுறுத்தல்




தமிழ்நாடு பீடி, சுருட்டு மற்றும் புகையிலைத் தொழிலாளர் சம்மேளன மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் 5.4.2025 அன்று, ஈரோட்டில் மாவட்ட ஏஐடியுசி அலுவலகத்தில் சம்மேளன மாநிலப் பொருளாளர் எஸ்.சின்னசாமி தலைமையில் நடைபெற்றது. சம்மேளனப் பொதுச்செயலாளர் எஸ்.காசிவிஸ்வநாதன் அறிக்கை சமர்ப்பித்தார். ஏஐடியுசி ஈரோடு மாவட்டச் செயலாளர் எம்.குணசேகரன் வாழ்த்தி பேசினார்.

இதில் ஏஐடியுசி, தமிழ்நாடு பீடி சுருட்டு மற்றும் புகையிலைத் தொழிலாளர் சம்மேளன மாநிலத் தலைவராக வேலூர் எஸ்.ஆர்.தேவதாஸ் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

தமிழ்நாட்டில் உள்ள பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு, புதிய ஊதிய ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டும். பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு 1000 பீடிகள் சுற்றுவதற்கு, அடிப்படை ஊதியமாக ரூ.400/ வழங்கப்பட வேண்டும். பீடி சுற்றும் தொழிலாளர்கள் அல்லாத மற்றவர்கள் தற்போது பெற்று வரும் ஊதியத்தில் 50% உயர்த்தி வழங்கப்பட வேண்டும். பீடித் தொழிலுக்கு ஒன்றிய அரசால் விதிக்கப்பட்டுள்ள ஜி.எஸ்.டி.வரியை 28% லிருந்து 5% ஆக குறைக்க வேண்டும். என்பன உள்ளிட்ட 25 அம்சக் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச்சங்க கோரிக்கை விளக்கக் கருத்தரங்கம்



பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச்சங்கத்தின் சார்பில், 13.04.2025 அன்று நாமக்கல்லில் கோரிக்கை விளக்கக் கருத்தரங்கம் மாவட்டத் தலைவர் என்.வி.இளஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது. ஆர்.சரண்யா, எம்.மகாதேவி, வி.கல்யாணமுருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயலாளர் பி.கோபி வரவேற்புரையாற்றினார்.

சங்கத்தின் அகில இந்தியத் தலைவர் பி.காளிதாசன் கருத்தரங்கைத் தொடங்கிவைத்தார். இதில், மருத்துவத் துறை பணியாளர் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, மாநிலத் தலைவர் துரைசாமி, மாநிலப் பொதுச் செயலாளர் சேலம் விஜயக்குமார், ஏஐடியூசி நாமக்கல் மாவட்டப் பொதுச் செயலாளர் தனசேகரன், மாவட்ட மகளிர் அணித்தலைவர் ஆர்.மல்லிகா, விஜய் ஆனந்த் ஆகியோர் சிறப்புரையாற்றினர். சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் கருத்தரங்க நிறைவு செய்து உரையாற்றினார். கோவை மாட்டச் செயலாளர் என்.சிவக்குமார், மாநில துணைப் பொதுச் செயலாளர் கே.பாலசுப்பிரமணியன், ஈரோடு மாவட்டத் தலைவர் கே.தியாகராஜன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். மாவட்டப் பொருளாளர் ஜி.முருகன் நன்றி நவின்றார்.

## சிலிண்டர் விலை உயர்வைக் கண்டித்து இந்திய மாதர் தேசிய சம்மேளனம் ஆர்ப்பாட்டம்






**திருப்பூர் புறநகர்:** இந்திய மாதர் தேசிய சம்மேளனம் திருப்பூர் புறநகர் மாவட்டம் காங்கேயம் படியூர் பேருந்து நிறுத்தத்தில், ஒன்றிய மோடி அரசு சிலிண்டர் விலை உயர்த்தியதைக் கண்டித்து, மாதர் சம்மேளனத்தின் ஒன்றியச் செயலாளர் டி.கீதா தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் திருப்பூர் புறநகர் மாவட்டச் செயலாளர் பி.நதியா, மாவட்டக் குழு உறுப்பினர்கள் பி.ஜோதிமணி, என்.சாவித்திரி, வி. மணிமேகலை உட்பட மாதர் சம்மேளன தோழர்கள் கலந்து கொண்டனர்.

**சிவகிரி:** இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில், ஈரோடு மாவட்டம் சிவகிரியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு, மாதர் சங்க கொடுமுடி ஒன்றியச் செயலாளர் இரா.செல்வி தலைமை தாங்கினார். எஸ்.சரஸ்வதி, சாந்தா அய்யாசாமி, பி.இராசாத்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயலாளர் எம்.ராணி ஆர்ப்பாட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் குணசேகரன், ஒன்றியச் செயலாளர் ஆர்.ரணதிவேல், நகரச் செயலாளர் டி.மணிவண்னன், கைத்தறி நெசவாளர்கள் சங்க மாநிலக் குழு உறுப்பினர் வி.சண்முகம் உட்பட பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

# சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் 135 வது பிறந்தநாள் விழா





அரசியல் சட்ட மேதை, அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 135 வது பிறந்தநாள் நிகழ்வு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.

**நாகை:** சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை அடுத்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் அவர்கள் நாகப்பட்டினம் கட்சி அலுவலகத்தில் அம்பேத்கர் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் வை.செல்வராஜ் எம்.பி., நாகை மாவட்டச் செயலாளர் சிவகுரு பாண்டியன், மாநில கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் கோ.பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மத்திய சென்னை:** சென்னை துறைமுகத்தில் உள்ள அவரது சிலைக்குக் கீழே வைக்கப்பட்டிருந்த உருவப் படத்திற்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவருடன் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் லி.உதயகுமார், மத்திய சென்னை மாவட்டப் பொருளாளர் மு.வரதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

◆ கட்சியின் அம்பத்தூர் பகுதிச் செயலாளர் இரா.விஜயகுமார் தலைமையில், அம்பத்தூர் டன்லப் கம்பெனி அருகில் அம்பேத்கர் சிலைக்கு, கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எஸ்.கண்ணன் மாலை அணிவித்துச் சிறப்புரையாற்றினார். இதில் ஆர்.துரைசாமி, பி.மாரியப்பன, ஜெகநாதன் மற்றும் பகுதிக் குழு தோழர்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

**கோவை:** தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில், கோவை ஆவாரம்பாளையத்தில், மாவட்ட தலைவர் பி.முருகன் தலைமையில் என்.விஸ்வநாதன், ஆர்.சந்திரசேகர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தொண்டாமுத்தூரில் ஒன்றிய தலைவர் இரா.ராஜன், ஒன்றியச் செயலாளர் மு.கலைமணி தலைமையில், கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் மா.நாகராஜன் பங்கற்றார்.

◆ கோவை வெங்கிட்டாபுரம் பூபேஷ் குப்தா நினைவு படிப்பகம் முன்பு, சா.கதிரவன் தலைமையில், அமைப்பின் மாவட்டச் செயலாளர் அ.அசரப் அலி உறுதி மொழியை வாசித்தார். மாவட்ட துணைத் தலைவர் கே.புருஷோத்தமன் சிறப்புரையாற்றினார்.

◆சூலூர் தெற்குகண்ணம்பாளையத்தில் எம்.அங்குசாமி தலைமையில் மாவட்டக் குழு உறுப்பினர் கே.ஆர்.குமார் சிறப்புரையாற்றினார். மேட்டுப்பாளையம் நகரத் தலைவர் யூ.ஆர்.பழனிச்சாமி தலைமையில், பொதுமக்களிடம் மனு கொடுக்கும் போராட்டம் நடைபெற்றது. இதில் கட்சியின் கோவை மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, நகரச் செயலாளர் சண்முகம், துணைச் செயலாளர் அ.மன்சூர், இளைஞர் பெருமன்றத்தின் நகரத் தலைவர் ராஜ்குமார் உள்ளிட்டோர் திரளாகப் பங்கெடுத்துக் கொண்டனர்.

**செங்கல்பட்டு:** மதுராந்தகம் தொகுதி மெய்யூரில் செ.இன்பராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் கே.வி.சேகுவேராதாஸ், பிளாப்பூர் கி.கதிர்வேல், சிதண்டி கே.முருகன், இளைஞர் பெருமன்றம் கு.அய்யனார் மற்றும் கிளைத் தோழர்கள் பங்கேற்றனர்.

**திருச்சி மாநகர்:** கட்சியின் திருச்சி மாநகர் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது. இதில் சிபிஐ மாநகர் மாவட்டச் செயலாளர் எஸ்.சிவா, ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் க.சுரேஷ், மாவட்ட துணைச் செயலாளர் சி.செல்வகுமார், மணிகண்டம் ஒன்றியச் செயலாளர் எம்.ஆர்.முருகன், கிழக்குப் பகுதிச் செயலாளர் எஸ். சையது அபுதாஹீர் உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள்.

**திருவண்ணாமலை:** திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் நகரம் தோக்கவாடியில் எம்.எஸ்.மாதேஸ்வரன், கே.அப்துல் மஜீத், எஸ்.சர்தார், எஸ்.ராஜா மற்றும் பலர் பங்கேற்றனர்.

**நெல்லை:** நெல்லையில் கட்சியின் மாவட்டச் செயலாளர் ஆர்.சடையப்பன் தலைமையில், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எஸ்.காசிவிஸ்வநாதன், ஆர்.ரெங்கன், துணைச் செயலாளர் கே.முத்துகிருஷ்ணன் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

**நாமக்கல்:** தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில். திருச்செங்கோடு தாலுகா எலச்சிபாளையத்தில் ஒன்றியத் தலைவர் கே.முத்துசாமி தலைமையில், கட்சியின் மாவட்டச் செயலாளர் க.அன்புமணி, டி.ஒ.பி.எம்.மாவட்டச் செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், டி.ஒ.பி.எம் தாலுகா தலைவர் பி.மன்னாதன், எலச்சிபாளையம் ஒன்றியச் செயலாளர் எல்.மாரிமுத்து உட்பட பலர் கலந்து கொண்டனர்.

◆ பெரிய மணலி பேருந்து நிறுத்தம் அருகில், டி.ஒ.பி.எம் திருச்செங்கோடு தாலுகா செயலாளர் சுரேஷ் தலைமையில் எலச்சிபாளையம் சிபிஐ ஒன்றியச் செயலாளர் கே.சிவக்குமார் உரையாற்றினார். திருச்செங்கோடு கட்சி அலுவலகத்தில், நகரத் தலைவர் எஸ்.பாலதண்டாயுதம் தலைமையில் மரியாதை செலுத்தப்பட்டது.

**கடலூர்:** கடலூரில் கட்சியின் மாவட்டச் செயலாளர் பி.துரை தலைமையில், மாவட்ட துணைச் செயலாளர் வி.குளோப், விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி, மாநகரச் செயலாளர் நாகராஜ் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

**விருதுநகர்:** இராஜபாளையத்தில் ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில், சிபிஐ மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, தஒவாஇ மாவட்டச் செயலாளர் பழனிக்குமார், ஏஐடியுசி அமைப்புச் செயலாளர் வி.இரவி, நகரச் செயலாளர் விஜயன், இளைஞர் பெருமன்றம் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் பகத்சிங் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

◆ சேத்தூர் காமராஜ் நகரில் அய்யணன் தலைமையில், ஒன்றியச் செயலாளர் கணேசமூர்த்தி, அமுல்ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். செட்டியாரபட்டியில் கிளைச் செயலாளர் அழகர் தலைமையில் தவிதொச மாவட்டச் செயலாளர் வரதராஜன் மாலை அணிவித்தார்.

◆ விருதுநகர் சத்தியரெட்டிபட்டியில், ஒன்றியச் செயலாளர் சக்கணன் தலைமையில் மாநிலக் குழு உறுப்பினர் பாலமுருகன், ஏஐடியுசி பாண்டியன், தஒவாஇ முருகேசன், மாதர் சங்க மாரீஸ்வரி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். திருச்சுழி பரளச்சியில், கிளைச் செயலாளர் லிங்கசாமி தலைமையில், ஒன்றியச் செயலாளர் செல்வம், தவிச சங்கரபாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**திருவாரூர்:** கட்சியின் திருவாரூரில் நகரச் செயற்குழு உறுப்பினர் தர்மதாஸ், பிஎஸ்என்எல் ஊழியர் சங்கத்தின் தலைவர் கூடு குணசேகரன் மாலை அணிவித்து உரையாற்றினார்.

**திண்டுக்கல்:** வேடசந்தூரில் கட்சியின் ஒன்றியச் செயலாளர் சி.எஸ்.முத்துசாமி தலைமையில், மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன் மாலை அணிவித்தார். இதில் மாவட்டச் செயற்குழு உறுப்பினர் எம்.சந்திரசேகரன், ஒன்றிய துணைச் செயலாளர் எம்பி.கனிவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**குமரி:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி குமரி மாவட்டக் குழு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

**மதுரை:** மதுரையில் கட்சியின் கட்டுப்பாடுக் குழு உறுப்பினர் ப.காளிதாஸ், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.முருகன், துணைச் செயலாளர் சி.தாமஸ், மாநிலக் குழு பா.ராஜலெட்சுமி, வடக்குப் பகுதிச் செயலாளர் வீரணசிங்கம், போக்குவரத்துக் குழுச் செயலாளர் ஜெயந்தி நந்தாசிங், தெற்குப் பகுதி துணைச் செயலாளர் எம்.பாலமுருகன், ஏஐடியூசி மாவட்ட தலைவர் எம்.நந்தாசிங், செயலாளர் கே.சேது உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வடசென்னை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வடசென்னை மாவட்டம், திருவொற்றியூர் டோல்கேட் அருகில் உள்ள திருவுருவச் சிலைக்கு, கட்சியின் வடசென்னை மாவட்ட முன்னாள் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி மாலை அணிவித்தார்.

**கள்ளக்குறிச்சி:** தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில், அம்பேத்கர் பிறந்தநாள் உறுதியேற்பு பொதுக்கூட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் மா.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய அமைப்புச் செயலாளர் தங்க பாலையா, அங்கம்மாள் முன்னிலை வகித்தனர். அகில இந்திய தலித் உரிமை இயக்கத்தின் தேசியச் செயலாளர் த.லெனின் சிறப்புரையாற்றினார். சிபிஐ மாவட்டச் செயலாளர் கே.ராமசாமி, சிபிஐ திருநாவலூர் ஒன்றியச் செயலாளர் ஜி.தாமோதரன், துணைச் செயலாளர் சுப்பிரமணியன், ஏ.கே. வேல்முருகன், மணிகண்டன், ஒன்றியப் பொருளாளர் செந்தில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**சாத்தூர் மேற்கு:** அம்பேத்கரின் பிறந்தநாள் விழா மற்றும் கருத்தரங்கம் சாத்தூர் மேற்கு அச்சங்குளம் கிராமத்தில் நடைபெற்றது. இதில் தி.ராமசாமி எக்ஸ் எம்எல்ஏ. பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, பி.லிங்கம் எக்ஸ் எம்.பி, முருகவேல்ராஜன் எக்ஸ் எம்.எல்.ஏ, மருத்துவர் அறம், வழக்கறிஞர் விசுவநாத், வட்டார வளர்ச்சி அலுவலர் தியாகத் அலி, தொழிலதிபர் வி.கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

◆ ஸ்ரீரங்கபுரத்தில் உள்ள சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. இதேபோல் சாத்தூரில் விசிக நடத்திய நிகழ்வில், சிபிஐ தாலுகா செயலாளர் சாமிநாதன், கலை இலக்கியப் பெருமன்ற மாநிலப் பொதுச் செயலாளர் டாக்டர் அறம் ஆகியோர் பங்கேற்றனர்.

## அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் மக்கள் பதிப்பு அறிமுக விழா

புதுக்கோட்டையில் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மற்றும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் இணைந்து, அண்ணல் அம்பேத்கரின் ஆக்கங்கள் அறிமுகம் 14.4.25 அன்று என்சிபிஹெச் மண்டல மேலாளர் சுரேஷ் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட தலைவர் எழுத்தாளர் அண்டனூர் சுரா நிகழ்ச்சியை அறிமுகம் செய்தார். மாவட்டச் செயலாளர் பாலச்சந்திரன், எழுத்தாளர் பாலையா, தமுஎகசவின் மாவட்டத் தலைவர் ராசி பன்னீர்செல்வம், மரு.ஜெயராமன், சந்திரா ரவீந்திரன், கஸ்தூரிரங்கன், முனைவர் சிவகவி காளிதாஸ், கவிஞர் பீர்முகமது, தமுஎகச மாநிலத் துணைத் தலைவர் கவிஞர் நா.முத்து நிலவன் சிறப்புரை ஆற்றினார்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி காங்கேயம் ஒன்றிய 15வது மாநாடு



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, திருப்பூர் புறநகர் மாவட்டம், காங்கேயம் ஒன்றிய 15வது மாநாடு, சிக்கரசம்பாளையத்தில் எஸ்.முத்துசாமி, ஆர்.செந்தில்குமார், பி.ஜோதிமணி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியினை என்.செல்லமுத்து ஏற்றினார்.

கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு தலைவர் கே.சுப்பராயன் எம்.பி தொடக்க உரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் வி.பி.பழனிச்சாமி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பி.நதியா, பொங்கலூர் ஒன்றியம் மூத்த தோழர் சரவணா சின்னச்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்க்

மாநாட்டை நிறைவு செய்து மாவட்ட துணைச் செயலாளர் எம்.மோகன் பேசினார். இதில் ஒன்றியச் செயலாளராக எம்.ராஜேந்திரன், துணைச் செயலாளராக ஆர்.செந்தில்குமார், பொருளாளராக என்.செல்லமுத்து ஆகியோர் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

காங்கேயம் ஒன்றியம் சிவன்மலை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில், கொடுமுடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் வாரம் இரு முறை தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**கீழக்கலங்கள் கிளை:** தென்காசி மாவட்டம், கீழக்கலங்கள் கிளைக் கூட்டத்தில், கிளைச் செயலாளராக ஆர்.எஸ்.காசிமணி, துணைச் செயலாளராக செல்வராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இதில் மாவட்ட விதொச செயலாளர் எம்.எஸ்.கிட்டப்பா சிறப்புரையாற்றினார்.

**ஆம்பூர் கிளை:** தென்காசி மாவட்டம் கீழ ஆம்பூரில், கட்சிக் கிளைக் கூட்டம் மாடசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் கிளைச் செயலாளராக சமுத்திரவேல், உதவிச் செயலாளர்களாக ஈ.முருகன், எம்.முருகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அ.பரமசிவன், சிவசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினார்.

**23வது வார்டு கிளை:** திருச்சி 23வது வார்டு கிளை மாநாடு மீனாட்சி சுந்தரம் தலைமையில், சங்கர் கொடி ஏற்றினார். மாநாட்டில் பகுதிச் செயலாளர் இரா.சுரேஷ் முத்துசாமி, மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ் ஆகியோர் பங்கேற்றனர். கிளைச் செயலாளராக பி.காந்தி, துணைச் செயலாளர்களாக ஆர்.சீனிவாசன், எஸ்.ராஜேஸ்வரி, பொருளாளராக கே.முருகன் ஆகியோர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# கலை இலக்கியப் பூங்கா

## சிந்துவெளி அகழாய்வு நூற்றாண்டுக் கருத்தரங்கம், தொல்லியல் கண்காட்சி

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் திண்டுக்கல் மாவட்டக் குழுவும், எம்.வி.எம் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி தமிழ்த்துறையும் இணைந்து நடத்திய, சிந்துவெளி அகழாய்வு நூற்றாண்டு கருத்தரங்கம் மற்றும் தொல்லியல் கண்காட்சி 26.03.2025 அன்று எம்.வி.எம் கல்லூரி உ.வே.சா அரங்கத்தில் நடைபெற்றது.



தொல்லியல் கண்காட்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் க.நாகநந்தினி திறந்து வைத்துத் தலைமையுரையாற்றினார். முனைவர் சண்முகப்பிரியா வரவேற்புரையாற்றினார். மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஜோசப் சார்லி ஆதாஸ் கருத்தரங்க நோக்கவுரை நிகழ்த்தினார்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் மருத்துவர் த.அறம் வாழ்த்துரை வழங்கினார். இதில் கவிஞர் சொக்கமேளா, முனைவர் சொ.சாந்தலிங்கம், முனைவர் ஆ.பிரபு, முனைவர் லூர்க்காஸ், சுந்தர சோழன், முனைவர் ஆ.குழந்தை, இர.அப்பாஸ் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இறுதியாக தகஇபெ மாவட்டச் செயலாளர் சு.பிரபாகரன் நன்றி கூறினார். இதில் தகஇபெ மன்றத் தோழர்கள் கவிஞர் பாஸ்டீன் மதுரம், மாவட்டத் துணைத்தலைவர் மருத்துவர் பழ.வெள்ளைச்சாமி, ஆசிரியர் மார்டின் ராஜகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## நூல் வெளியீட்டு விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற சூலூர் கிளையின் 79 வது அமர்வில், திரைப்படப் பாடகர் சிலோ அவர்களின் பாடல் பற்றி, டாக்டர் ராஜேந்திரகுமார் எழுதிய நூல். திறனாய்வாளர் பத்மநாபன் வெளியிட, மௌனசாமி பெற்றுக் கொண்டார்கள். உடன் கிளைச் செயலாளர் நடராஜன் பங்கேற்றார்.

## நூல் விமர்சனக் கூட்டம்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற தேவகோட்டை கிளை சார்பில், மருத்துவர் தா.கணியன் பூங்குன்றனின் "என் திண்ணை சொன்ன கவி" நூல் விமர்சனக் கூட்டம் கிளைத் தலைவர் எஸ்.செல்வராஜ் தலைமையில், வழிகாட்டுக் குழு உறுப்பினர் வாழ்க வளமுடன் ரா.நாகராதாகிருஷ்ணன் வரவேற்க நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தேவகோட்டை நகர மன்ற தலைவர் சுந்தரலிங்கம், துணைத் தலைவர் இரமேஷ், வழக்கறிஞர் உ.சிவராமன், மருத்துவர் அமுதா காசிநாதன், மருத்துவர் ஏ.ஜெயக்குமார், மருத்துவர் செ.சிவக்குமார், மருத்துவர் கே.செந்தில்குமார், கவிஞர் என்.சபாரெத்தினம், நகர் மன்ற உறுப்பினர் மு.அய்யப்பன், சிவகங்கை உறுப்பினர் குமார், மாவட்டச் செயலாளர் பேராசிரியர் முனைவர் கரு.முருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நூலாய்வு உரையை மாவட்டத் தலைவர் முனைவர் மு.பழனியப்பன் நிகழ்த்தினார். நூலாசிரியர் மருத்துவர் இரா.தா.கணியன் பூங்குன்றன் அவர்கள் ஏற்புரை நிகழ்த்தினார். நன்றியுரை பேராசிரியர் தர்மராஜ் நன்றியுரை கூறினார். முக்கியப் பிரமுகர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## பராரி திரைப்பட இயக்குநருடன் கலந்துரையாடல்

பராரி திரைப்பட இயக்குநர் எழில் பெரியவேடி அவர்களுடனான கலந்துரையாடலைத் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மதுரை மாவட்டக் கிளை, மதுரையில் ஏற்பாடு செய்திருந்தது. காவல்துறையின் மேனாள் துணைக் கண்காணிப்பாளர் கவிஞர் பேனா மனோகரன் தலைமையில், மாவட்டத் தலைவர் கவிஞர் மு.செல்லா, சாகித்ய அகாதெமி மொழிபெயர்ப்பு விருதாளர் பா.ஆனந்தகுமார், கவிஞர் ஜி.மஞ்சுளா முன்னிலை வகித்தனர்.

தமிழறிவு மின்னிதழின் முதன்மைப் பதிப்பாசிரியர் முனைவர் ச.தமிழரசன், தமிழ்நாட்டரசின் சிறுகதை விருதாளர் ஆ.பாண்டி, பேராசிரியர் பெரியசாமி ராஜா, நூலகர் ந.முருகேச பாண்டியன், கலகல வகுப்பறை ரெ.சிவா, மதுரை சரவணன் உள்ளிட்டோர் கலந்துரையாடினர்.

பராரி திரைப்பட இயக்குநர் எழில் பெரியவேடிதம் அனுபவங்களையும், கொள்கை நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தினார்.

முன்னதாக முனைவர் சு.முத்தையா வரவேற்றார். பேராசிரியர் இரா.தமிழரசன், எழுத்தாளர் பா.சத்யாதேவி, செல்வம் ராமசாமி, முனைவர் கலையரசி உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஒத்தக்கடைக் கிளை போஸ் உள்ளிட்டோர் துணை நின்றனர். செந்தமிழ்க் கவிஞர் கி.சிவா நன்றி கூறினார்.

## எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் நூற்றாண்டு விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற காஞ்சிபுரம் மாவட்டக் குழுவின், மார்ச் மாத இலக்கியச் சந்திப்பு மகளிர் தின உரை அரங்காகவும், எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் நூற்றாண்டு விழா உரை அரங்காகவும் 29.3.2025 அன்று பல்லாவரத்தில் கண்டோன்மென்ட் ஏஐடியூசி துணைப் பொருளாளர் எம்.யாஸ்மின் தலைமையில் நடைபெற்றது.

மகளிர் தினத்தை ஒட்டி, "பெண்மையைப் போற்றுவோம்" என்கின்ற தலைப்பில் கவிஞர்கள் சி.ராமலிங்கம், கல்லை ஜெயராமன், ஆ.கிருஷ்ணன் ஆகியோர் சிறந்த கவிதைகளைத் தந்தனர். ராஜம் கிருஷ்ணன் நூற்றாண்டு விழா உரையினை, கலை இலக்கியப் பெருமன்ற மாநிலக் குழு உறுப்பினர் முனைவர் பேராசிரியர் மா.இலெமூரியா வழங்கினார். மகளிர் தின உரையினை எழுத்தாளர் பிரேமா ரவிச்சந்திரன் வழங்கினார். இதில் முற்போக்கு எழுத்தாளர் சங்க தேசியச் செயலாளர் டி.எஸ். நடராஜன், மாவட்டத் தலைவர் ஜீவா மணிக்குமார், மாவட்டச் செயலாளர் ராமலிங்கம், மாவட்டப் பொருளாளர் சங்கரநாராயணன், எழுத்தாளர் கன்யூட் ராஜ் ஓவியக்கவி வீரமணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

◆ தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சாத்தூர் கிளை மற்றும் எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி அறக்கட்டளை இணைந்து நடத்திய உலக மகளிர் தினவிழா, எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் நூற்றாண்டு கருத்தரங்கம், தனுஷ்கோடி அரங்கத்தில் நடைபெற்றது. நிகழ்வின் துவக்கமாக சந்தானமுத்து குழுவினரின் இசைப் பாடல்கள் பாடப்பட்டன. ஆசிரியை மகாலட்சுமி கு.கணேசன், முருகேஸ்வரி ஆகியோர் பாடல்கள் பாடினார்கள். இந்நிகழ்விற்கு திருமதி.பொ.நா.கமலா தலைமை வகித்தார். முனைவர் சற்குணம் வரவேற்புரை நல்கினார். விழா பேருரையை த.க.இ.பெ.தலைமைக் குழு பேராசிரியர் தோதாத்திரி நிகழ்த்தினார்.

கோடுகளும் கோலங்களும் நாவல் பற்றி எழுத்தாளர் விஜிலா தேரிராஜன், தலைமுறைகள் நூல் குறித்து த.க.இ.பெ மாவட்டப் பொருளாளர் நித்யா கணேசன் ஆகியோர் பேசினார்கள். செல்வி ஸ்ரீநிதி தான்யா ஒரு பாடல் பாடினார்.

கரிப்பு மணிகள் நாவல் குறித்து த.க.இ.பெ மாநிலத் துணைச் செயலாளர் சசிகலா, டி.விஜயராஜா பேசினார்கள். பெண் குரல் என்ற நாவல் குறித்து த.க.இ.பெ ராஜபாளையம் கிளை பத்மாகுரு பேசினார். இந்தியச் சமுதாய வரலாற்றில் பெண்மை என்ற நூல் குறித்து த.க.இ.பெ ராஜபாளையம் கிளை கவிஞர் மழயிசை பேசினார்.

மாநிலப் பொதுச்செயலாளர் மருத்துவர் அறம் பேசுகையில் பெண் கடவுள் வழிபாடு குறித்து "உலக வரலாற்றில் பெண்கள்" என்னும் நூலில் இருந்து எடுத்துக்காட்டுடன் விவரித்தார். சமூக மாற்றம் என்பது பெண் அடிமைத்தனம் மாறினால் மட்டுமே நிகழும் எனக் கூறினார்.

வேருக்கு நீர் நாவல் பற்றி த.க.இ.பெ சிவகாசி கிளை பேராசிரியை வே.தீனதயாளி பேசினார். அவல் காரி சிறுகதை பற்றி த.க.இ.பெ சாத்தூர் கிளையைச் சார்ந்த கி.மகாலட்சுமி ஆசிரியை அவர்கள் சிறப்பாகப் பேசினார். ஆசிரியை ரேவதி நன்றியுரை நல்கினார்.

◆ தீரன் சின்னமலை மகளிர் கலை அறிவியல் கல்லூரியும், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற திருப்பூர் மாவட்டக் குழுவும் இணைந்து நடத்திய, எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் நூற்றாண்டு இலக்கிய விழா நிகழ்ச்சிக்குக் கல்லூரியின் முதல்வர் முனைவர் ரேச்சல் நான்சி பிலிப் தலைமை தாங்க, கல்லூரி அறக்கட்டளையின் பொருளாளர் ஓகே டெக்ஸ் கந்தசாமி முன்னிலை வகித்தார்.






தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் வெ.காயத்ரி வரவேற்புரை நல்கினார், பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் ஏ.வி. பழனிசாமி வாழ்த்துரை வழங்கினார். பெருமன்றத்தின் மாநில துணைச் செயலாளர் த.சசிகலா நோக்கவுரை ஆற்ற, தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் தேன்மொழி அறிமுக உரை வழங்கினார். ராஜம் கிருஷ்ணன் படைப்புகளில் பெண் என்ற தலைப்பில், மதுரைக் கல்லூரி தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் காந்திமதி உரை நிகழ்த்தினார்கள்.

சிலப்பதிகார ஆடல் வகைகள் என்ற தலைப்பில் பரதகலாமணி மகதி நாகராஜன், நாட்டிய கலாமணி ஐஸ்வர்யா சுரேஷ் ஆகியோரின் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் அகஸ்டின் மேரி நன்றியுரை ஆற்றினார்.

# நூல் நயம்

## தனித்தொகுதி




சமூக மாற்றத்திற்கான கரு மருந்தை நிரப்பிய, கவிதை எனும் கையெறி குண்டு சே.நித்தியானந்தம் எழுதிய இந்நூல். எளிய வார்த்தைகளைக் கொண்டு பாட்டாளிகளின் துயரத்தையும், அவர்கள் படுகிற இன்னலையும் பேசி, அதற்கான மாற்றத்தையும் முன்மொழிகிற கருத்துக்களை கொண்டுள்ளது.

ரத்த வாடை இல்லாமல், சமத்துவம் பேசும் சாணக்கியர்களுக்கு இல்லை, சாமானியர்களுக்காக சண்டையிடும் அது எது?. அதுதான் சிகப்பு துண்டு என்று ஆரம்பமே அமர்க்களம். காக்கி உடை இல்லாமலும், கருப்பு கோட்டு இல்லாமலும், முக்கால்வாசி சண்டை, சச்சரவுகளை தீர்த்து வைக்கும் இந்த சிகப்பு துண்டு. இதுதான் சமத்துவத்தின் குறியீடு, சமாதானத்தின் குறியிடும் ஆகும். இது கடந்து வந்த பாதையில் எத்தனையோ மனிதர்களின் கௌரவம் நிலைநாட்டப்பட்டு இருக்கிறது.

அந்தத் தெரு ஆளுக்கு மயிரெடுக்கும் பரியாறி, இந்த தெரு ஆளுக்கு எடுக்க மாட்டார், மயிர் சாதி. சாதி சக மனிதனை எப்படி எல்லாம் இழிவு படுத்துகிறது என்பதை இந்த மயிர் எனும் கவிதையில் கூறி, சாதி வெறியர்களின் உச்சி மண்டையில் ஓங்கி அறைகிறார். பெயர் என்பது ஒவ்வொரு மனிதனையும் தனித்தனியாக அடையாளப்படுத்துவதற்கு. ஆனால், அந்த பெயரே இந்த சாதி சமூகத்தில் ஒரு மனிதனின் கௌரவத்தை எவ்வாறு சீர்குலைக்கிறது என்பதை இந்த கூலி மகன் கவிதையில் அறிய முடிகிறது. ஒரு விவசாய கூலி தொழிலாளியை அப்பனும், பாட்டனும் மட்டுமல்ல, பேரனும் பேர் சொல்லி அழைப்பான், அந்தத் தொழிலாளிக்கு எந்த சமூக கௌரவமும் கிடையாது என்பது எவ்வளவு பெரிய வேதனை.

உழைப்பாளி மக்களுக்கு ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு குழம்பு உண்டு. அது சைவம் அல்ல, அசைவம். அதை விட்டு நாங்கள் அசையோம் என ஆணித்தரமாக தனது உணவு உரிமையை வலியுறுத்துகிறார். இதுபோன்ற சிறந்த கவிதைகள் இந்நூலில் விரைவி கிடக்கிறது. வாங்கி படிக்கவும்.

– சமரன்

| | |
|---|---|
| நூலாசிரியர் | : செ.நித்யானந்தம் |
| பக்கம் | : 56 விலை : 80 |
| வெளியீடு | : இனியவள் பதிப்பகம், 1,ஆர்.எம்.எஸ் காலனி, சாந்தி நகர், கூடல் நகர் மேம்பாலம் அருகில், மதுரை –625018 |

# மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் சிபிஐ பொதுச் செயலாளருடன் சந்திப்பு








◆ மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகமான டெல்லி அஜய் பவனுக்கு ஏப்ரல் 14 அன்று வருகை தந்தார். அவருடன் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்கள் அசோக் தாவ்லே, நிலோத்பல் பாசு, ஆர்.அருண்குமார் ஆகியோரும் சென்றனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா மற்றும் தேசியச் செயலக உறுப்பினர்கள் பல்லப் சென்குப்தா, ஆனி ராஜா உள்ளிட்டோர் அவர்களை வரவேற்றனர். பின்னர் கலந்துரையாடினர்.

## டெல்லி நாடாளுமன்றம் முன்பாக

# கட்டுமானத் தொழிலாளர்கள் மாபெரும் போராட்டம்

கட்டுமானத் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடுகிறார்கள், தங்களது வாழ்வாதாரத்திற்கான தீவிர போராட்டங்களின் தொடர்ச்சியாக, அகில இந்தியக் கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர் மகா சம்மேளனம் ஏஐடியுசி சார்பில், 2025 மார்ச் 28 அன்று, நாடாளுமன்றம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், 25 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 5000 கட்டுமானத் தொழிலாளர்கள் பங்கேற்றனர். சங்கத்தின் மூத்த துணைத் தலைவர் பாசுதேப் குப்தா தலைமையில், பொதுச் செயலாளர் விஜயன் குனிசேரி கோரிக்கைகளை விளக்கி பேசினார். துணைப் பொதுச் செயலாளர் எம்.பிரவீன் குமார் அனைவரையும் வரவேற்றார். ஏஐடியூசி பொதுச் செயலாளர் அமர்ஜீத் கவுர் போராட்டத்தைத் துவக்கி வைத்தார். கே.சுப்பராயன் எம்.பி, சந்தோஷ் குமார் எம்.பி, வஹிதா நிஜாம், ராமகிருஷ்ண பாண்டா. இளைஞர் பெருமன்றத்தின் தேசியப் பொதுச்செயலாளர் திருமலை, சம்மேளனத்தின் பொருளாளர் என்.செல்வராஜ் ஆகியோர் உரையாற்றினர்.





பின்னர் கே.சுப்பராயன் எம்.பி தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சரைச் சந்தித்து, சங்கத்தின் கீழ்க்காணும் கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார்.

தொழிலாளர் குறியீடுகளை ரத்து செய்து, பிஒசி சட்டத்தைக் கண்டிப்பாகச் செயல்படுத்தவும். இ.எஸ்.ஐ சட்டத்தில் அனைத்துக் கட்டுமானத் தொழிலாளர்களும் சேர்க்கப்பட வேண்டும், போனஸுக்கு வழங்க வேண்டும். பி.எப், பணிக்கொடை மற்றும் பண்டிகைக் கால உதவித்தொகை வழங்க வேண்டும். குறைந்தபட்ச ஊதியம் மாதத்திற்கு ரூ.36,000 ஆக உயர்த்தப்பட வேண்டும். ஓய்வூதியத்தை மாதம் ரூ.6000 ஆக உயர்த்தப்பட வேண்டும், செஸ் தொகையை 2% ஆக உயர்த்தி, நிதிசேகரிப்பை அதிகரிக்க வேண்டும். நிதியை முறையாகப் பயன்படுத்துவதற்குக் கண்காணிப்புக் குழுக்களை அமைக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

# பூர்வி, மிருதங், சந்தூர், கணித் பிரகாஷ்..

## இந்தியில் ஆங்கிலப் பாட நூல்களின் பெயர்கள்

### என்.சி.இ.ஆர்.டி நடவடிக்கைக்கு எதிர்ப்பு

என்.சி.இ.ஆர்.டி எனப்படும் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தன்னாட்சி அமைப்பாக இருந்தாலும், தற்போது ஒன்றிய அரசின் கைப்பாவையாகவே செயல்பட்டு வருகிறது. அதுவும், என்.சி.இ.ஆர்.டி சங்கிகளின் கைகளுக்குச் சென்ற பிறகு, இந்தித் திணிப்பும் அறிவியலுக்குப் புறம்பான கருத்துகளும் பாட நூல்களில் இடம்பெற்று வருகின்றன. தற்போது என்.சி.இ.ஆர்.டி ஆங்கில வழிப் பாடநூல்களுக்கு இந்தியில் பெயர் வைத்திருப்பதை சர்ச்சையாகி இருக்கிறது.


ஒருபாடநூல் எந்த மொழியில் வெளியிடப்படுகிறதோ, அந்த மொழியில் பெயர் வைப்பதுதான் வழக்கம். இந்த நடைமுறைகளை எல்லாம் காற்றில் பறக்கவிட்டுள்ள என்.சி.இ.ஆர்.டி., ஆங்கில மொழிப் பாட நூல்களுக்கு இந்தியில் பெயர் வைத்துள்ளது.


6 மற்றும் 7 ஆம் வகுப்பு ஆங்கில மொழிப் பாடநூல்களின் பெயர்கள் 'ஹனிசக்கிள்' மற்றும் 'ஹனிகோம்ப்' என்று இருந்தன. இந்த ஆங்கிலப் பாடநூல்களின் பெயர்கள், 'பூர்வி' என இந்தியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.


அதேபோல் 1 மற்றும் 2 ஆம் வகுப்புகளுக்கான ஆங்கிலப் பாடநூலின் பெயரை 'மிருதங்' என்றும், 3 மற்றும் 4 ஆம் வகுப்புகளுக்கான ஆங்கிலப் பாடநூலின் பெயர் 'சந்தூர்' என்றும், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் பாடப் புத்தகங்களுக்கும் இந்தியில் பெயர் சூட்டப்பட்டுள்ளது. 'Mathematics' என்றிருந்த ஆறாம் வகுப்பு கணிதப் பாடநூலின் பெயர் 'கணித் பிரகாஷ்' (Ganit Prakash) என்று இந்தியில் மாற்றப்பட்டுள்ளது.


மூன்றாம் வகுப்பு கணிதப் பாடநூலின் பெயர் 'கணித மேளா' (Maths Mela) என்றும், மூன்றாம் வகுப்பு உடற்கல்வி பாட நூலுக்கு 'கேல்யோக்' என்றும், 6ஆம் வகுப்பு உடற்கல்வி பாட நூலுக்கு 'கேல் யாத்ரா' என்றும், 6 ஆம் வகுப்பு தொழில்கல்வி பாடநூலுக்கு 'கவுஷல் போத்' என்றும் இந்தியில் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

என்.சி.இ.ஆர்.டி.யின் இந்தி திணிப்பு நடவடிக்கை கல்வியாளர்களிடம் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.



Posted at Egmore RMS Patrika Channel, Chennai - 600 008.

16 ஏப்ரல் 20 ஏப்ரல் 26 2025 **ஜனசக்தி**

**JANASAKTHI** Tamil Weekly Cell: 9444331138
Day of Publication: Every Thursday

Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026

Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# அகில இந்திய விவசாயிகள் சங்க 30வது மாநாடு





























◆ அகில இந்திய விவசாயிகள் சங்க தேசிய மாநாட்டில், பிரதிநிதிகளுக்கான மருத்துவ தேவைகளை நிறைவு செய்ய டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத், டாக்டர் ஏ.ஆர்.சாந்தி தலைமையில் சமூக சமத்துவத்துக்கான டாக்டர்கள் சங்கம் முகாம் அமைத்து பணி செய்தது.






Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.